Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

பெப்ரவரி 02 - 08, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 948

## 13 பிளஸ் தீர்வும் அதிர்வும்





## அதே பாணி! அதே அணி!! அதே அதிரடி!!!

## வெடி குண்டே! விபரீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அவசரமாக அமுல்படுத்த முடியாது

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில் அமைச்சர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அவசர அவசரமாக அமுல்படுத்த முடியாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து சட்ட மா அதிபர் திணைக்களமும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், சாட்சிகளை கவனத்திற் கொண்டே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனால், பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் அவசரப்பட முடியாது என அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமை கவுன்ஸிலில் தருஸ்மன் அறிக்கை?!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலில் அமர்வுகளில் தருஸ்மன் அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட சில நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளில் தருஸ்மன் அறிக்கை தொடர்பில் விவாதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்கப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

## சிரேஷ்ட அமைச்சர்களின் பிரச்சார சுற்றுப்பயணம்

புலிகளின் ஆதரவு புலம்பெயர் தமிழ் சமூகத்தினால் நாட்டுக்கு எதிரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதால், இவ்வாறான பிரச்சாரங்களை முறியடிக்கும் நோக்கில் முக்கிய அமைச்சர்கள் சிலர் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

ஜோன் செனவிரட்ன, கெஹெலிய ரம்புக்வெல மற்றும் டிலான் பெரேரா ஆகிய அமைச்சர்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு விஜயம் செய்து, நாட்டுக்கு ஆதரவான பிரச்சாரங்களை மேற்கொள்ள உள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இலங்கைக்கு எதிராக மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளில் பிரச்சாரம் செய்ய உள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்றும் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயர்தரப் பரீட்சை முடிவுகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகள் குறித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16 மாணவர்களும், அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியன இந்த மனுவை தாக்கல் செய்துள்ளன. குறித்த பரீட்சை பெறுபேற்றின்போது வெட்டுப்புள்ளிகள் கணிக்கப்பட்ட விதத்தை ஆட்சேபித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வெளியிடப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழக அனுமதிகோரப்படுவதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

# கிழக்குப் பல்.கலையில் மோசமான நிர்வாகச் சீர்கேடுகள்

**பேராசிரியர் ரஞ்சித் அத்தநாயக்க**

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த முப்பது வருடங்களாக உள் நிர்வாக முறைகேடுகளும், நிதி மோசடிகளும் இடம்பெற்றுவருவதாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கடந்த 11 மாதங்களாகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்ட பேராசிரியர் ரஞ்சித் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிதி நிர்வாகம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளில் முறைகேடுகள் இடம்பெற்றுவருவதைத் தான் அங்கு கடமையாற்றிய 11 மாதங்களில் அவதானித்து வருவதாகவும், எனினும் அவை குறித்த விபரங்களை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதில் பொருத்தமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜெயந்த நவரட்ண கூறுகையில், குறித்த நிலைமையைச் சரிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் புதிய உபவேந்தர் நியமிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளதோடு, புதிய உபவேந்தர் தெரிவிற்காக மூன்று பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் முன்மொழியப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதிக்கே இவர்களில் ஒருவரைத் தெரிவு செய்யும் அதிகாரம் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்த காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர், 2004 ஆம் ஆண்டு இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அதே போன்று 2006 ஆம் ஆண்டு உபவேந்தராக இருந்த பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத் கடத்தப்பட்டிருந்தார். இவ்வாறான சம்பவங்களைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான விரிவுரையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பு தேர்தல் தொடர்பில் விசேட கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளினதும் செயலாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது தேர்தலை நடத்தும் திகதி பற்றி ஆராயப்பட்டதோடு, அரசியற் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பிலும் ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி

வடக்கு வைத்தியசாலை புனரமைப்புக்கு ஜோர்ப்பிய நிதியத்தின் ஊடாக 200 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிதி வடக்கு வைத்தியசாலை புனரமைப்பு அடிப்படை வைத்திய வசதிகள் பூர்த்தி என்பவற்றுக்காக வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 5 வருட திட்டத்தின் கீழ் 20 வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு அமைத்தல், சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் 20 புதிதாக அமைத்தல் மற்றும் 20 இரசாயனக் கூடங்களை அமைத்தல் என்பன இந்நிதியூடாக செயற்படுத்தப்படவுள்ளன. இதேவேளை அண்மையில் வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் வடக்கின் தற்போதைய சுகாதார நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டியில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

கண்டி பிரதான வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. சுமார் 850 மில்லியன் ரூபா செலவில் பத்து மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் முதல் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதாரப் பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, உட்பட அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இக்குறித்த கட்டடப் பணிகள் நிறைவுற்றதும் சர்வதேச தரத்திலான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதனால் மத்திய மாகாண மக்கள் பெரும் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலவசக் கல்வியை பாதுகாக்க ஒத்துழைக்க வேண்டும்

**தம்பர அமில தேரர் அழைப்பு**

"கை தியல் கொலவெறி" வை சொல்லியொன்றுக்கூட்டத்தில் அர்த்தமில்லை என இலவசக் கல்வியை பாதுகாக்கும் தேசிய அமைப்பினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த வணக்கத்திற்குரிய தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இலவசக் கல்வி பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. கல்வி மறுசீரமைப்பு என்ற பெயரில் இலவசக் கல்வி முறைமையை ஒடுக்க முயற்சிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிரேஷ்ட பொறுப்பாளர்கள் வெறுமனே வை திஸ் கொலவெறி கொலவெறி என்றிருக்காது, இலவசக் கல்வி உரிமையை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்க வேண்டும். போராட்டத்துடன் இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

# நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவுள்ளது

**எதிர்வுகூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்**

எதிர்வரும் மாதங்களில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக கோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொண்டால் இரண்டு வீத வட்டியை செலுத்த வேண்டியேற்படும் ஆகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு வர்த்தக வங்கிகளிலிருந்து ஆறுவீத வட்டிக்கு கடன் பெற்றுக் கொள்வதற்கு சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது. இவ்வாறு கடன் பெற்றுக் கொள்வதனால் நாடு பாரியளவிலான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

## ஆசனப்பட்டி அணியாவிட்டால் உடனடித் தண்டப்பணம்

ஆசனப் பட்டிகளை அணியாது வாகனங்களின் முன்று ஆசனங்களிலிருந்து பயணிப்போரை நீதிமன்றம் அனுப்பாது உடனடி தண்டப்பணம் விதிக்கும் நடவடிக்கையை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்ககோனிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையுடன் நீதிமன்றம் அனுப்பாது உடனடியாக தண்டப்பணம் விதிப்பது எனத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதே பாணி! அணி!! அதிரடி!!

**ஹெலிகொப்டர்** மூலம் தரையிறங்கி பின்லேடனை கொன்ற அதே அதிரடிப்படை, சோமாலியாவில் 9 கடத்தல்காரர்களை கொன்றுவிட்டு, இரு பணயக் கைதிகளை மீட்டு வந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் நேரடி உத்தரவின்படி இந்த நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. நேவி சீல்ஸ் அதிரடிப்படை விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகள் அமெரிக்கரான ஜெசிகா புச்சனன், டென்மார்க்காரர் பவுல் தியாகெஸ்டட். இதில் சாகசமும் இருக்கிறது. அதிரடியும் இருக்கிறது. அரசியலும் இருக்கிறது.

பின்லேடனை வேட்டையாடிய நேவி சீல் டீம் 6, இந்த அதிரடி மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ளட்டும் என்று ஜனாதிபதி ஒபாமா, தாக்குதல் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன் உத்தரவு பிறப்பித்திருந்தார். அதிலிருந்து அதிரடி குழுவுக்கு, ஆபிரிக்க நடவடிக்கைக்கான சில சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆனால், தாக்குதலுக்கான இறுதி உத்தரவு கொடுக்கப்படவில்லை. அணி அமெரிக்காவிலேயே தயார் நிலையில் இருந்தது.

கடைசி நேரத்திலேயே இறுதி உத்தரவு கொடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தானில், பின்லேடன் கோட்டைக்கு சென்றது போன்ற அதே ஆக்ஷன் பிளான்தான். ஹெலிகொப்டரில் சென்று, அவர்கள் எதிர்பாராத நேரத்தில் அதிரடியாக இறங்கி, பணயக் கைதிகளை உயிருடன் மீட்க வேண்டும். கடத்தல்காரர்களையும் உயிருடன் பிடிக்க முடிந்தால் நல்லது. முடியாவிட்டால் கொன்றுவிடலாம்.

பின்லேடன் வேட்டை ஒப்பிரேஷனுக்கும் இதற்கும் இடையே உள்ள இரண்டு வித்தியாசங்கள். முதலாவது, பின்லேடன் ஒப்பிரேஷனில், அங்கிருந்த யாரையும் தேவை ஏற்பட்டால் கொல்ல முடியும். சோமாலியா ஒப்பிரேஷனில், இரு பணயக் கைதிகள் கண்டிப்பாக உயிருடன் மீட்கப்பட வேண்டும்.

இரண்டாவது, பின்லேடன் ஒப்பிரேஷனில் அவர் இருந்த வளாகத்திலேயே நேரில் சென்று இறங்கியது ஹெலிகொப்டர். இதில், கடத்தல்காரர்கள் அறியாத இடம் ஒன்றில் இறங்கி, கால்நடையாகச் சென்று சுற்றி வளைத்து தாக்க வேண்டும்.

ஹெலிகொப்டர் இறங்கும் ஓசையில் பணயக் கைதிகளை கடத்தல்காரர்கள் கொன்றுவிடலாம் என்பதற்காக திட்டத்தில் இந்த மாறுதல். இருளை தமக்கு மறைவாகக் கொண்டு ஹெலிகொப்டர் மூலம் சோமாலியாவுக்குள் புகுந்தது நேவி சீல் டீம். பணயக் கைதிகள் வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக முழுமையான உளவுத் தகவல்களும் சி.ஐ.ஏ.-யால் திரட்டப்பட்டு கொடுக்கப்பட்டிருந்தது. அடோ என்ற சிறிய நகருக்கு அருகே இருந்தது அந்த இடம். கடத்தல்காரர்கள் பணயம் கைதிகளை வைத்திருந்த இடத்தில் இருந்து சிறிது தொலைவில், ஹெலிகொப்டரில் இருந்து பாரசூட் உதவி கொண்டு குதித்தனர் அதிரடிப்படை டீம். இருளோடு இருளாக பணயக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த வீட்டை நோக்கி நகர்ந்தனர்.

இரவு நேரங்களில் அந்த வீட்டில் காவல் எப்படி இருக்கும், எத்தனை கடத்தல்காரர்கள் காவலுக்கு இருப்பார்கள் என்ற விபரங்கள் எல்லாம் சி.ஐ.ஏ.-யால் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், அந்த கடத்தல்காரர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் சி.ஐ.ஏ. உளவுத் தகவல்களை திரட்டியிருந்தது. அவர்களின் நடவடிக்கைகளில் சுவாரசியமான ஒன்று, சூரியன் மறைந்தபின் கடத்தல்காரர்கள் குறிப்பிட்ட ஒரு இலையை மென்று தின்கிறார்கள். இந்த இலை புகையிலை போல இருக்கும் ஒருவித போதையை கொடுக்கக் கூடியது.

நேவி சீல் டீம் தமது இலக்கை சுற்றி வளைத்து போசிஷன் எடுத்தபின்,



அதிரடியாக வீட்டினுள் புகுந்தது. இரு பணயக் கைதிகளுக்கும் காவலாக 12 கடத்தல்காரர்கள் இருந்தார்கள். இலை மென்றதால் லேசான போதையில் இருந்த போதிலும், அவர்கள் துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்கள். நேவி சீல் டீம் திருப்பிச் சுட்டதில் 9 பேர் கொல்லப்பட்டார்கள். 3 பேர் காயமடைந்து வீழ்ந்தார்கள். பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர். அந்த தகவல் ஹெலிகொப்டர் விமானிக்கு கொடுக்கப்பட்டது. ஹெலிகொப்டரும் வந்து சேர, இரு பணயக் கைதிகளையும், காயமடைந்த கடத்தல்காரர்களையும் ஏற்றிக்கொண்டு, அந்த இடத்தைவிட்டு அகன்றுவிட்டது நேவி சீல் டீம் இலக்கம் 6. காப்பாற்றப்பட்ட பணயக் கைதிகளையும், உயிருடன் கைப்பற்றப்பட்ட கடத்தல்காரர்களையும் ஏற்றிச் சென்ற சீல் டீம் ஹெலிகொப்டர், டிஜிபோட்டிக்கு அருகே உள்ள அமெரிக்க இராணுவத்தளத்தில் தரையிறங்கியதாக, ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் உள்ளன. ஆபிரிக்காவில் உள்ள இந்த அமெரிக்க இராணுவத் தளத்துக்கு கடந்த மாதம் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லியோன் பனேட்டா விஜயம் செய்திருந்தார்.

இந்த ஒப்பிரேஷன் பின்னணி முன்கூட்டியே அமெரிக்காவின் திட்டத்தில் இருந்ததையே அவரது அந்த மாத விஜயம் காட்டுகிறது என்று இப்போது சொல்கிறார்கள். சோமாலியாவில் அப்பகுதி பாதுகாப்பு படையினருக்கோ, காவல்துறைக்கோ இப்படி ஒரு அதிரடித் தாக்குதல் திட்டம் இருக்கும் விடயமே சொல்லப்படவில்லை. குறுகிய நேரத்தில் ஒப்பிரேஷன் முடிந்து அதிரடி டீம் வெளியேறிய பின்னரே அவர்களுக்கு விடயம் தெரிந்து, வந்து பார்த்தார்கள். மீட்கப்பட்ட பணயக் கைதிகள் இருவரும் டி.ஆர்.சி. அமைப்புக்காக (The Danish Refugee Council – DRC) சோமாலியாவில் பணிபுரிந்தவர்கள். வெளிப்படையாகப் பார்த்தால், கடத்தல்காரர்களால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க பிரஜை ஒருவரை (அத்துடன் மற்றொரு நாட்டு மனிதநேய பணியாளரையும்) மீட்டு வந்த சம்பவம் போல இந்த ஒப்பிரேஷன் தோன்றுகிறது அல்லவா. ஒரு விதத்தில் அதுவும் உண்மைதான். ஆனால், அத்துடன் இதில் அரசியலும் உள்ளது என்றால் நம்புவீர்களா? கீழுள்ள குறிப்புகளை தொகுத்துவிட்டு நீங்களே முடிவு செய்யுங்கள்.

1) உலகின் பல பகுதிகளிலும் அமெரிக்கப் பிரஜைகள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்படுகின்றனர். தற்போதும், சிலர் பணயக் கைதிகளாக உள்ளனர். பணயக் கைதிகள் பிடிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் அமெரிக்கா மீட்பு நடவடிக்கையில் இறங்குவதில்லை.

2) பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பெண் ஜெசிகாவின் உடல்நிலை மோசமடைந்து வருவதாகவும், உடனடியான மருத்துவ உதவி கிடைக்காவிட்டால், அவரது உடல்நிலை மேலும் மோசமாகி விடும் என்றும் வெள்ளை மாளிகைக்கு தகவல் கிடைத்தது என்று அமெரிக்க ஊடகங்களில் கூறப்படுகிறது.

3) மேலேயுள்ள முதலாவது குறிப்பில், பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட மற்றைய அமெரிக்கர்களை விடுவிக்க முயற்சி எடுக்காமல், ஜெசிகா விஷயத்தில் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ஏன் என்று யாராவது கேட்டால், அதற்கு வெள்ளை மாளிகை சொல்லும் பதிலாக இதை எடுத்துக் கொள்ளலாம். தொடர்ந்து, அடுத்த குறிப்பையும் படியுங்கள்.

4) பணயக் கைதிகள் இருவரும் பணி-



புரியும் டி.ஆர்.சி. அமைப்பு ஜெசிகாவின் உடல்நிலை நன்றாகவே உள்ளது. அவருக்கு சில மருந்துகள் கொடுத்தால் போதுமானது என்று கூறியிருக்கிறது. சரி. இல்லாத மருத்துவ காரணத்தை சொல்லி எதற்காக இந்த ஒப்பிரேஷனை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது? அடுத்த குறிப்பை பாருங்கள்

5) அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் வரவுள்ளது. ஒபாமாவின் பிரச்சாரத்துக்கு, அவரது ஆட்சியில் பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம், பெரிதும் உதவும் என்று நம்பப்படுகிறது. பின்லேடனை கொன்ற அதே டீம்தான் இந்த ஒப்பிரேஷனையும் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது.

6) இப்போது இந்த அதிரடி ஒப்பிரேஷன் அமெரிக்க ஊடகங்களில் பரபரப்பாக அடிபடுகிறது. இது தொடர்பாக ஒவ்வொரு ஊடகமும் ஏதாவது சொல்லும் போது, பின்லேடனை கொன்ற அதே டீம் என்ற விடயத்தையும் சேர்த்தே சொல்லப் போகின்றது. அந்த வகையில், பின்லேடன் ஒப்பிரேஷன் மக்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தப்படும்.

7) இந்த அதிரடி நடவடிக்கைக்கு இரவு நேரம் குறிக்கப்பட்டது. குறித்த நேரத்தில் பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர்.



**(22ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி: த.பெ.இல: 167, யாழ்ப்பாணம்.

# கல்யாணப் பெண் செய்யும் பேஷியல்

முதன் முதலாக பேஷியல் செய்து கொள்ள வரும் திருமணப்பெண்ணிற்கு 'ஹேர்' பேஷியல்தான் சிறந்தது.

ஏற்கனவே பல முறை பேஷியல் செய்தவர்களாக இருந்தால் மட்டும் கோல்ட் பேஷியல் தேர்வு செய்து கொள்ளலாம். கோல்ட் பேஷியல் செய்தால் திருமணச் சடங்குகள் முடிந்தும் அவர்களது சருமம் பொலிவாக இருக்கும்.

ஆனால் பேஷியல் செய்து வெளியில் எங்கும் செல்லாமல் இருந்தால் 10 நாட்கள் முதல் 12 நாட்கள் வரை சருமத்தின் பொலிவு வெளிப்படும். ஆனால் திருமணப் பெண் எப்படி வெளியில் செல்லாமல் இருப்பார்கள். ஷொப்பிங், அது இது என வெளியில் செல்ல வேண்டி வரும் என்பதால் அதற்கு கோல்ட் பேஷியல் ஏற்றதாக இருக்கும்.

பேஷியலில் சில்வர் பேஷியல், கோல்ட் பேஷியல், டைமண்ட் பேஷியல் என பல வகை இருந்தாலும் கோல்ட் பேஷியல் எல்லோருக்குமே பொருந்தி விடும்.

எந்த பேஷியலாக இருந்தாலும் அதில் பயன்படுத்தப்படும் க்ரீம்கள்தான் மிகவும் முக்கியம். அதைப்பொறுத்தே அந்த பேஷியல் எப்படிவரும் என்பதைக் கூற முடியும்.

# விரல் சூப்பும் குழந்தைகள்

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் முக்கியமான உணவாகும். ஒரு தாய் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் போது அது இருவருக்குள்ளும் ஒரு நெருக்கத்தை உருவாக்குகிறது. இந்த நெருக்கமில்லாத குழந்தைகளே அதிகமாக விரல் சூப்பும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றன. புட்டிப்பால் குடிக்கும் குழந்தைக்கு இப்படியான பழக்கம் அதிகம் உள்ளது.

பெற்றோரிடம் தேவையான அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவை கிடைக்காத சூழலில் தான் குழந்தைகளிடம் விரல் சூப்பும் பழக்கம் ஏற்படுகிறது. பெற்றோர்களிடம் நிரந்தர சண்டை இருந்தால் அவர்களின் குழந்தைகளிடம் விரல் சூப்பும் பழக்கம் உறுதியாக இருக்கும் என்கிறார்கள். குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு வழியில் மன அழுத்தம் ஏற்படும் போது அவை விரல் சூப்புவதைத்தான் விரும்புகிறது. சில குழந்தைகள் ஓய்வுக்காகவும், தூக்கம் நன்றாக வருவதற்காகவும், சில சமயம் பசிக்காகவும் கூட விரல்களைச் சூப்புகின்றன.

விரல்களை சூப்பும் குழந்தைகளுக்கு அந்த விரல்களுக்கு ஏதாவது வேலை இருக்கும்படி ஓவியம் வரைதல், பொம்மைகளை பிடிக்க வைத்தல் போன்ற மாற்று வழிகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். இப்படி செய்வதால் குழந்தைகள் சிறிது சிறிதாக இப்பழக்கத்தை விட்டுவிடுவார்கள். சில குழந்தைகள் இரவில் தூக்கத்தின் போது கை சூப்பும். இந்நிலையில் பெற்றோர் விரல்களை எடுத்து விடவேண்டும். இதுபோல் தூக்கம் போது குழந்தைகளின் கையில் ஏதாவது ஒரு விளையாட்டு பொம்மையைக் கொடுத்தால், அந்தப் பொம்மையைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்ற கவனத்தில் விரல் சூப்பாமல் இருக்கும். விரல் சூப்பும் குழந்தை தனியில் விருப்பங்களில் வேப்பெண்ணெய், தேன் கலந்து பூசிவிடுதல் போன்ற வன்முறையான செயல்களைத் தவிர்த்து விடுங்கள். இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இடையே வெளியை நிலைகளிலேயே அதிகரிக்கும். இவற்றின் மூலம் குழந்தைகளை விரல் சூப்புவதிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம்.

# பெண்களுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பது ஏன்?




சமுதாயத்தைப் பொறுத்தவரை எந்த தவறையும் ஆண்கள் செய்யலாம். ஆனால் பெண்கள் செய்யக் கூடாது என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒரு விதி. ஆனால் இதை பெண் அடிமைத்தனம் என்று எடுத்துக் கொள்வதை விட, ஆண் செய்யும் தவறால் சமுதாயத்தில் எந்த பெரும் சிக்கலும் உருவாகாது ஆனால் அதே தவறை பெண் செய்யும் போது பல கேள்விக்குறிகள் எழும்.

உதாரணமாக, ஒரு ஆண் திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபடலாம். அதனால் அவனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால் ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபடுவதால் கர்ப்பமுற நேரிடும். இதனால் அவள் பெற்றெடுக்கும் பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம்.

ஒரு ஆண் பிடித்த பெண்ணை பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கு அவன் காதலிச்ச பெண்ணைக் கட்டிக்கொண்டான் என்று சொல்வார்கள். ஆனால், ஒரு பெண் இதைச் செய்தால் அவள் ஓடிப்போய்விட்டாள் என்று கூறுவார்கள்.

இது போல ஒரு குடும்பத்தில் வாழும் பெண், தான் காதலிக்கும் ஆணை நம்பி வீட்டை விட்டு வெளியேறுவதால், அவள் வாழ்க்கை மட்டும் பாதிக்கப்படுவதில்லை, அந்த பெண்ணின் குடும்பத்தாரும் பல வழிகளில் பாதிக்கப்படுகிறார்கள்.

பெண் வீட்டை விட்டு ஓடுவதால் ஏற்படும் துக்கத்தை விட, அதனால் ஏற்படும் அவமானமே அவர்களை நிலைகுலையச் செய்துவிடும். உற்றார், உறவினர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும், பெண் எங்கே என்று கேட்கும் கேள்விக்கு சொல்வதறியாது கலங்கும் பெற்றோரின் நிலை பரிதாபத்துக்குரியது.

உங்கள் பெண் எங்கே என்று கேட்பவர்களுக்கு அந்த பெற்றோரால், என் மகள் காதலித்தவனை திருமணம் செய்து கொண்டான் என்று சொல்ல முடியும். கூனிக் குறுகி அவர்கள் நிற்பதைக் கண்டு கேள்வி கேட்டவர்களே புரிந்துகொண்டால்தான் உண்டு.

இந்த நிலையில், வீட்டை விட்டுச் செல்லும் பெண்ணிற்கு திருமணமாகாத சகோதரிகள் இருப்பின், அவர்களது வாழ்க்கை இன்னும் மோசமாகிறது. திருமணத்திற்காக வரன் தேடும் போது கேட்கும் முதல் கேள்வி அவர்களது குடும்பத்தைப் பற்றியதுதான். அதில் இப்படி ஒரு சிக்கல் இருப்பின், மாப்பிள்ளை வீட்டார் சற்று தயக்கம் காட்டத்தான் செய்வார்கள். அக்காள் இப்படி என்றால் தங்கை எப்படி இருப்பாளோ என்று வாய்விட்டு பேசுபவர்களும் உண்டு.

சமுதாயத்தின் ஆணிவேரே பெண்தான். இதனால்தான் ஆணிவேர் எந்த வகையில் தவறு செய்ய நேர்ந்தாலும் அதனால் பாதிக்கப்படுவது முழு மரமும்தான் என்று பயந்துதான் பெண்களுக்கு இவ்வளவு கட்டுப்பாடுகளையும் இந்த சமுதாயம் விதித்துள்ளது.

# பெண்கள் அதிகம் சிரிப்பது ஏன்?



அவள் புன்னகை என்ன சத்தது. இப்படிச் சொல்லும் ஆண்கள் ஏராளம். சிரிப்பு மனிதனுக்கு அழகு. அதிலும் பெண்களின் சிரிப்புக்கு சிறப்பு அதிகம்.

சின்ன சந்தோஷம் தரும் விஷயமாக இருந்தாலும் பெண்கள் நீண்ட நேரம் சிரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் அப்படி இடைவிடாமல் சிரிக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா.

கலிபோர்னியாவில் உள்ள ஸ்டேன்போர்டு பல்கலைக்கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டது. 10 ஆண்களையும், 10 பெண்களையும் தேர்வு செய்து கார்ட்டூன் படங்களைக் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்களும் கண்காணிக்கப்பட்டது.

கார்ட்டூன் படத்தில் இருந்த பஞ்ச் வசனம் அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிரிப்பை வரவழைத்தது. இதில் பெண்கள் நீண்ட நேரம் சிரித்தபடி இருந்தனர்.

இதற்கு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகும். அதாவது பெண்களின் மூளையின் கார்டெக்ஸ் பகுதிக்கு முந்தைய அடுத்த இதில் முக்கிய பங்காற்றுகிறது. அவர்களின் மூளை விவேகமாக செயல்படுவதுடன் அதிக எதிர்பார்ப்பின்றி இருக்கிறது. எனவே இயல்பான ஜோக்குகள் கூட அவர்களுக்கு விசேஷமாகத் தெரிகிறது. இதனால் எளிதில் சிரிப்பைத் தூண்டிவிடுகிறது. அத்துடன் பஞ்ச் வசனங்கள் மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துவிட்டால் விடாமல் சிரிப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

பொதுவாக ஆண்களின் சிரிப்பானது தன்னை முன்னிலைப்படுத்தும் வகையில் அமைகிறது. பெண்கள் சிரிப்பானது உறவை வளர்க்கும் விதமாகவும் பிறரை நோகச் செய்யாமல் இருக்கும் வகையிலும் அமைகிறது என்கிறது ஆய்வு. பிறர் நோகாமல் நோயின்றி வாழுங்கள்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-305

கேள்வி : முதன் முதலாக திருமணப் பெண்ணுக்குச் செய்யும் சிறந்த பேஷியல் எது?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 305**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு. த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி-13.02.2012

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல- 303 இற்கான விடை:- விற்றமின் "சி" சத்துக்களான பாதாம், பிஸ்தா, முந்திரிப் பருப்பு, கொய்யாப் பழம், வேர்க்கடலை.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- ச. சிந்துஜா, மானிப்பாய்.

பெயர் : ................................................

முகவரி : ................................................

................................................

................................................

தே.அ. அட்டை இல : ................................................

விடை : ................................................

கையொப்பம் : ................................................

304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் மக்களை மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கு வழி நடத்த எவரும் முன்வருவதற்கு விரும்பாத வகையில் புலிகளின் முடிவு மிகப் பயங்கரமானதாக முடிவு செய்யப்பட்டது. ஆனாலும் தமிழ் தேசியம் பேசுகின்றவர்கள் தமிழ் மக்களிடத்தில் இனவாத உணர்வை மேலோங்கச் செய்து அரசியல் நடத்த எத்தனிக்கின்றனர். அதற்காக தமிழ் மக்களை ஒன்று சேர்த்து அகிம்சைப் போராட்டத்தை நடத்தப் போவதாக இப்போதெல்லாம் அறிக்கைவிடுகின்றனர்.**

# வெடி குண்டு! விபரீதம்

அலசுவது மதியூகி

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றது. குண்டு வெடிப்பு பற்றிய அச்சமோ படுகொலைகள் பற்றிய அச்சமோ இல்லாமல் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக இருக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாததால் தொடர்ந்தும் நம்பிக்கையீனமே வளர்ச்சி பெற்று வருகின்றது. தமிழர் தரப்பில் அரசியல் என்பது தீர்வு பற்றிப் பேசுவதே என்றாகி விட்டது.

தமிழ் மக்களை மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கு வழி நடத்த எவரும் முன்வருவதற்கு விரும்பாத வகையில் புலிகளின் முடிவு மிகப் பயங்கரமானதாக முடிவு செய்யப்பட்டது. ஆனாலும் தமிழ் தேசியம் பேசுகின்றவர்கள் தமிழ் மக்களிடத்தில் இனவாத உணர்வை மேலோங்கச் செய்து அரசியல் நடத்த எத்தனிக்கின்றனர். அதற்காக தமிழ் மக்களை ஒன்று சேர்த்து அகிம்சைப் போராட்டத்தை நடத்தப் போவதாக இப்போதெல்லாம் அறிக்கை விடுகின்றனர்.

தமிழ் கூட்டமைப்பு தனது மூக்கணாங்கயிறை மூன்றாந்தரப்புகளிடம் பிடி கொடுத்துவிட்டு முட்டி மோதிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களை போராட்டத்தின் பெயரால் வீதியில் இறக்கப் போவதாகச் சொன்னாலும், [illegible] செயல் வடிவம் [illegible] களத்தில் குதிக்கமாட்டார்கள். [illegible] இவர்களை நம்பி தமிழ் மக்கள் வீதியில் இறங்க மாட்டார்கள் என்பது [illegible] தெரியும். [illegible] எது நடந்தாலும் [illegible] இல்லை என்று [illegible] சிந்தனை [illegible] தயாராக இல்லை.

மிகவும் வலிமையற்ற அடித்தளத்தில் அகிம்சையாக துளிர்த்த எழுச்சியே பின்னர் பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் கண்டு, நாட்டை அழிவுக்குள் தள்ளிவிட்ட பயங்கரவாதத்தை இந்த மண்ணில் தோற்றம் பெறச் செய்தது. தற்போதோ பல்வேறுபட்ட அனுபவங்களும் துணைத் தளங்களும் வசதி வாய்ப்புகளும் தாராளமாகக் கிடக்கின்றது.

அதுபோன்றதொரு தவறுக்கு இனி இடமில்லை.

ஆகவேதான் இன்னும் வடக்கு என்றும், தமிழர் தாயகம் என்றும், இனவாதச் சித்தாந்த கோஷங்களுடன் முன்னெடுக்கப்படுகின்ற அத்தனை அசைவுகளையும் துல்லியமாக அவதானிக்க வேண்டிய தேவை உணரப்படுகின்றது. தமிழ் மக்கள் யுத்தத்துக்குப் பின் இயல்பு வாழ்வை விரும்புவார்கள். ஐக்கியமாக வாழ்வதையும் சகிப்புத்தன்மையோடு வாழ்வதையும் விரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கி தமிழ் மக்கள் தூண்டப்படுகின்றார்கள், இனவாதச் சாயத்துக்குள் இழுக்கப்படுகின்றார்கள் என்ற எச்சரிக்கை உணர்வு தோற்றம் பெறுவதற்காக கூட்டமைப்பு கச்சிதமாக பணியாற்றி முடித்திருக்கின்றது. இந்த நிலைமையானது இராணுவ முகாம்களை மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து அகற்றுதல் மற்றும் படைச் செயற்பாட்டை இயல்புச் சூழலிருந்து அப்புறப்படுத்தல் போன்ற செயற்பாட்டை துரிதப்படுத்துவதை விடவும், படையினரின் பிரசன்னத்தை அதிகப்படுத்துவதையும், தெருவுக்கு தெரு முகாம்களையோ அல்லது காவலரண்களையோ வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையோ உருவாக்கவே செய்துள்ளது.

தொடர்ந்தும் வெடி பொருட்கள் கண்டெடுக்கப்படுவதாக வெளிவரும் செய்திகளும், உயர்பாதுகாப்பு பகுதிகள் மற்றும் மிதிவெடி அபாயங்கள் தொடர்பான செய்திகளும் எப்போது தீர்ந்து போகும் என்று எரிச்சலோடும் ஏமாற்றத்தோடும் பார்த்துக் கொண்டிருக்கையில் கடந்த ஜனவரி 27ஆம் திகதி யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் வண்டியில் இருக்கைக்கு அடியில் வெடி குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிவந்த செய்தி வேடிக்கையாக இருந்தது.

யுத்தம் முடிந்துவிட்டது புலிகள் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று கூறப்பட்டது. படை முகாம்கள் புதிய வடிவத்தில் அமைக்கப்படுகின்றன. இயல்புச் சூழல் தோற்றுவிக்கப்பட்டாலும் படையினரின் தலையீடு உள்ளது என்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. பிடிக்கப்பட்ட அல்லது சரணடைந்த புலிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றனர். இதற்கிடையே விடுவிக்கப்பட்ட முன்னாள் புலிகளும் முன்னர் வன்னியில் வாழ்ந்தவர்களும் இரகசியமாகவும் நேரடியாகவும் தொடர்ந்தும் விசாரிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் இல்லை. தெருவுக்குத் தெரு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒரு சீருடையும் துப்பாக்கியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் உணர்கின்றனர்.

இத்தனையையும் தாண்டி யாழிலிருந்து வெடிகுண்டை எடுத்துச் செல்லும் ஒரு வன்முறை விரும்பி இருக்க முடியாது. அப்படித்தான் வெடிகுண்டு தொடர்பான நோக்கமிருப்பின் அதற்கு வேலை இங்கேயே இருக்கலாமென்று ஒரு விவாதத்துக்கு வைத்துக் கொண்டாலும் கொழும்புக்கு எடுத்துச் சென்று பதற்றத்தை தோற்றுவிக்க முடியுமென்று சிந்திக்கும் ஒருவன் போராட்ட குணமுள்ளவனாக இருக்க முடியாது.

தற்போதைய சூழலில் வெடிகுண்டுத் தேவை படையிலிருந்து முறையற்ற விதத்தில் விலகியவர்களின் கைகளுக்குத் தேவையாக இருக்கலாம். அல்லது தற்போதைய யாழ்.கொழும்புக்கான சுமுகமான பயணத்தை சீர்குலைக்கும் நோக்கம் கொண்டதாகவோ, தமிழ் மக்களின் போக்குவரத்து நடமாட்டத்தை கண்காணிப்புடன் கூடிய நெருக்கடி மிகுந்ததாக மாற்றவேண்டிய தேவையுடையதாக்குவதாக இருக்கலாமென்பது தமிழ் மக்களுக்கு தற்போது எழுந்துள்ள சந்தேகமாகவுள்ளது.

> **"தற்போதைய சூழலில் வெடி குண்டுத் தேவை படையிலிருந்து முறையற்ற விதத்தில் விலகியவர்களின் கைகளுக்குத் தேவையாக இருக்கலாம். அல்லது தற்போதைய யாழ். கொழும்புக்கான சுமுகமான பயணத்தை சீர்குலைக்கும் நோக்கம் கொண்டதாகவோ, தமிழ் மக்களின் போக்குவரத்து நடமாட்டத்தை கண்காணிப்புடன் கூடிய நெருக்கடி மிகுந்ததாக மாற்ற வேண்டிய தேவையுடையதாக்குவதாக இருக்கலாமென்பது தமிழ் மக்களுக்கு தற்போது எழுந்துள்ள சந்தேகமாகவுள்ளது."**

யுத்தத்துக்குப் பின்னர் பொதுவாக சோதனைச் சாவடிகளில் முன்னரைப் போல் அல்லாமல் வயதானவர்கள், பிள்ளைகளை வைத்திருப்போர், நோயாளிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் சோதனைச் சாவடிகளில் வாகனத்தை விட்டு இறங்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. படையினர் நெகிழ்வுத் தன்மையோடு மக்களை அணுகினார்கள். மெல்ல மெல்ல படையினர் மீதான அச்சம் அகன்று நட்போடு பழகுகின்ற நிலைமை உருவாகி வந்தது. இந்தச் சூழலை இந்த வெடிகுண்டுச் செய்தி தகர்த்து விட்டுள்ளது. இனிச் சோதனைச் சாவடிகளில் பாரபட்சமற்ற வகையில் அனைவரும் இறங்க வேண்டும். நீண்ட தூரம் நடக்கவேண்டும். தமக்கு அருகில் இருப்பவர் குறித்து அச்சப்பட வேண்டும். எப்போது வேண்டுமானாலும் ஒரு வெடிகுண்டு கண்டுபிடிக்கப்படலாம் அல்லது வெடிக்கலாம் என்ற நிச்சயமற்ற நிலைக்கு முகங்கொடுக்க வேண்டும்.

அடையாள அட்டை, முன்னாள், இந்நாள் உறுதிப்பத்திரங்கள், பதிவுகள் என தம்மை நிரூபிப்பதற்கான அத்தனை ஆவணங்களையும் கையோடு வைத்திருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சோதனைகளுக்கும், சுற்றிவளைப்புகளுக்கும் ஆளாகலாம் என்றொரு நிலைமை திட்டமிடப்படுவது போல சந்தேகம் பொது மக்களுக்கு எழுகின்றது.

வெடிகுண்டுச் செய்தி வெறும் செய்தி அல்ல. உண்மையில் மக்களிடம் எழுந்துள்ள அச்சத்தையும் சந்தேகத்தையும் இல்லாமல் செய்வது முக்கியமென உணரப்பட்டால் கண்டெடுக்கப்பட்ட வெடி குண்டைக் கொண்டு வந்தவர் யார் என்பதையும் என்ன நோக்கத்துக்காக வெடி குண்டு பயணிகள் பஸ்வண்டியில் கொண்டு வரப்பட்டது என்பதையும் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டில் மீண்டும் பாதுகாப்பற்றதொரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு நிதர்சனமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருவ வயதை பாதிப்பது எது?

**பருவ** வயது உடலுறவு மூளை, நரம்புகளை பாதிக்கும். இளம் வயதில் உடலுறவு வைத்துக் கொள்வது எதிர்காலத்தில் மூளை செயல்பாடுகள், நரம்பு மண்டலத்தை பாதிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பருவ வயதில் உடலுறவு வைத்துக்கொள்ளும் கலாசாரம் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் அதிகரித்து வருகிறது. இதுதொடர்பாக அமெரிக்காவின் ஓஹியோ மாநில மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். பிறந்து 40 நாட்கள் ஆன பெருச்சாளிகளை வைத்து ஆய்வு நடத்தினர். நன்கு வளர்ந்தவை, சின்ன வயதில் இருப்பவை, இளம் எலிகள் என மூன்றாக பிரிக்கப்பட்டன. செக்ஸ் உணர்வை தூண்டும் ஊசி போட்டு சோதனை நடத்தப்பட்டது. பின்னர், எலிகளிடம் மருத்துவ ரீதியாக ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் ஆராயப்பட்டன.

மற்ற பிரிவுகளுடன் ஒப்பிடும் போது இளம் வயது எலிகளின் செயல்பாடுகள் உடலுறவுக்குப் பிறகு பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அவற்றின் அன்றாட செயல்பாடுகளில் கணக்கம், சோர்வு காணப்பட்டது. நரம்பு மற்றும் மூளை செயல்களும் பாதிக்கப்பட்டிருந்தன. அன்றாட உணவைக் கூட உண்ணாமல் ஒரே இடத்தில் முடங்கி கிடந்தது.

சரியான பருவத்தில் இருந்த எலிகள் வழக்கம் போல இருந்தன. இளம் பருவத்தில் உடலுறவு வைத்துக் கொள்வது மூளை, நரம்பு மண்டல வளர்ச்சியை பாதிக்கும் என்பது இந்த ஆய்வின் மூலம் உறுதியாக தெரிகிறது. மனிதர்களுக்கும் இது பொருந்தும். இதன் பாதிப்பு உடனடியாக இருக்காது என்றாலும் எதிர்காலத்தில் அதிகரிக்கும்.

# ஓரக்கண் பார்வைக்காக ஏங்குகிறீர்களா?

**உங்களை** நேசிக்கிற பெண் நேருக்கு நேர் பார்க்கமாட்டாள். கடைக் கண்ணால் நோக்குவாள். நீங்கள் பாராத சமயமாய்ப் பார்த்து மகிழ்வாள். உங்கள் மீது அக்கறையற்றவள் போல் பாசாங்கு செய்வாள். அவசியமில்லாத நிலையிலும் அளவுக்கு மீறி இழுத்து போர்த்திக் கொள்வாள்.

நீங்கள் ஏதாவது கேட்டு வைத்தால் புன்முறுவலுடன் தலை குனிவாள். பொருளற்ற வார்த்தைகளை உதிர்ப்பாள். ஆனால், உங்கள் அருகாமையை விரும்புவாள். மணிக்கணக்கில் மௌனமாய் அமர்ந்திருப்பாள்.

அவள் தொலைவில் உங்களை கண்டதும் தனது தோழிகளிடம் அவர் என்னைப் பார்த்தாரா என்று கேட்டு உங்கள் கவனத்தை ஈர்ப்பாள். உங்களைப் போகவிட்டுச் சிரிப்பாள். உங்கள் முன்னிலையில் யாருடைய குழந்தையையும் எடுத்துக் கொஞ்சுவாள், முத்தமிடுவாள்.

அவளுடைய உடம்பிலுள்ள ஒவ்வோர் அங்கமும் உங்கள் மீது அவள் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தும்.

ஏதாவது ஒரு சாக்கு வைத்துக்கொண்டு உங்கள் வீட்டுக்கு வருவாள். தன்னை விசேடமாய் அலங்கரித்துக் கொண்டிருப்பாள். அவளுடைய கைக்குட்டை சூடிய மலர், மோதிரம் போன்ற சின்னச் சின்னப் பொருள்களில் ஒன்றை உங்களுக்கு தரும்படி விரும்பிக் கேளுங்கள். முதலில் சற்று தயங்கினாலும் பிறகு மறுக்கமாட்டாள்.

அவளுக்கு நீங்கள் வாங்கிக் கொடுத்த ஆடை, அணிகளை எப்போதும் பிரியமாய் அணிந்து கொள்வாள். ஒரு பெண்ணின் காதலை உறுதி செய்து கொள்ள இப்படி அநேக வழிகள்.

உங்களிடம் மிகுந்த நேசம் கொண்ட பெண் எதற்கும் தயாராகிவிடுவாள். உங்களுடன் துயிலவும், உங்களை இரகசியமாய் மணந்து கொள்ளவும். அவளுடன் நீங்கள் சதுரங்கம் ஆடும் போது தவறுதலாய் ஒரு காயை அவள் நகர்த்திவிட்டால் இது தப்பு என்று அவள் கையை பற்றுங்கள். பார்ப்பதற்கு தவறை தடுக்கின்ற மாதிரி தெரிய வேண்டும்.

அதையே சாக்காய் வைத்து நெடுநேரம் அவள் கையை விடமாட்டீர்கள். அவளும், அதை விடுவித்து கொள்வதற்கு முயலமாட்டாள். உங்களுக்குள் ஒரு புதிய நெருக்கம் ஏற்பட்டிருப்பதை இருவருமே அப்போது உணர்வீர்கள்.



# நெருக்கம் அதிகமானால் மனஅழுத்தம் குறையும்!

**வாழ்க்கைத்** துணையை அடிக்கடி கட்டிப்பிடிப்பதால் மனஅழுத்தம் குறையும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜூரிச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பீட் டிட்சன் தலைமையிலான குழுவினர் சமீபத்தில் 51 ஜோடிகளிடம் மன அழுத்தம் குறித்து ஆராய்ச்சி செய்தனர்.

இந்த ஜோடிகளில் பெரும்பாலோர் திருமணமானவர்கள். இவர்களிடம் ஒரு வாரம் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் குறித்து பீட் டிட்சன் கூறியதாவது:

நெருக்கமாக இல்லாமல் இருக்கும் ஜோடிகளை விட நெருக்கமாக பழகி அடிக்கடி கை குலுக்குவது, கட்டிப்பிடிப்பது மற்றும் உடலுறவு கொண்ட ஜோடிகளிடம் மனஅழுத்தம் குறைந்திருந்தது.

இவர்களிடம் மனஅழுத்தத்துக்கு காரணமான கார்டிசால் என்ற ஹோர்மோன் குறைவான அளவிலேயே சுரப்பது தெரிய வந்தது.

மனஅழுத்தம் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டதாகக் கூறிய ஜோடிகள், நெருக்கமாக இருக்கத் தொடங்கிய பிறகு மனஅழுத்தம் குறைந்ததாகக் கூறினர்.

அதேநேரம் மனஅழுத்தத்தை குறைப்பதற்காக ஜோடிகள் போட்டி போட்டுக் கொண்டு நெருக்கம் காட்டக் கூடாது. இருவரும் மனம் ஒருமித்து நெருக்கமாக இருக்க வேண்டும். நெருக்கம் என்பது ஒவ்வொரு ஜோடிக்கும் மாறுபடும். தினசரி வாழ்க்கையில் குறிப்பிட்ட வகையில்தான் நெருக்கத்தை காட்ட வேண்டும் என்று அர்த்தமல்ல. இவ்வாறு பீட் டிட்சன் கூறியுள்ளார்.



# புதிரான உணர்வலைகள்!

**உணர்வுகளின்** உச்சக்கட்டம் ஒரே மாதிரியானது தான். அதாவது தொடுதல், முத்தமிடுதல், கட்டி அணைத்தல், தழுவுதல், புணர்தல், சுயஇன்பம் அனுபவித்தல், திரைப்படம் மூலமோ, புத்தகங்கள் மூலமோ, அல்லது கற்பனை மூலமோ இப்படிப் பலவாறு உச்சக்கட்டம் எட்டப்படுகிறது. இது போலப் பல வகைகளில் உச்சக்கட்டத்தை அடைந்தாலும் உடல் அதற்கு ஒரே விதமாகத்தான் அனிச்சையாகப்பலன் கொடுக்கிறது என்பது தான் உண்மை.

பாலுணர்வுத் தூண்டலின் போது நமது உடலுக்குள் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய அறிவு இருந்தால் தான் செக்ஸ் பற்றிய மாயைகள் விலகி அதை முழுமையாக அனுபவிக்க முடியும்.

கிளர்ச்சி அடைவது என்பது என்ன? அதாவது செக்ஸ் அடிப்படையில் அலசிப் பார்த்தால் அது பால் உறுப்புக்களையும், நரம்பு மண்டலத்தையும் பொறுத்த ஓர் எதிர் அலை. மூளை தான் இந்தக் கிளர்ச்சி அத்தனைக்கும் மூல காரணமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மூளையில் இருந்து கிளம்பும் மின் உணர்வுகளும், இரசாயன சமிக்ஞைகளும் தண்டுவடத்தின் மூலமும், நரம்பு நுனிகள் மூலமும் உடலெங்கும் பரவுகின்றன. மூளையில் இருந்து இப்படி ஒரு செயல் நடந்து கொண்டிருக்க, தோல் மற்றும் செக்ஸ் உறுப்புகள், மார்பகங்களிலிருந்து கிளம்பும் சமிக்ஞைகளும் மூளையைச் சென்றடைகின்றன.

இதற்குக் காரணம் பாலுணர்வு அடிப்படையான சிந்தனை, உணர்வு, படிமம் போன்றவை இன்றி பாலுணர்வுக் கிளர்ச்சி என்ற விஷயத்துக்கே துளியும் சாத்தியமில்லை. ஆனால் உடல் உணர்ச்சிகளே தேவையின்றி சில சமயம் பாலுணர்வுக் கிளர்ச்சி என்பது தனியே மூளை மட்டும் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.

அதிலும் சில சமயங்களில் செக்ஸ் உறுப்புக்களிலிருந்து தோன்றும் இனம் புரியாத உணர்வலைகள் மிக ஆழமாக உருவாகி அதனால் மூளை என்ன உணர்ந்தது என்றே உணர முடியாமலும் போகலாம். இந்த நிலை தான் தன்னை மறந்த நிலை எனப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியானது எது என்று உணர்ந்த பின்னும் அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனம்.

கன்பூசியஸ்

## வாரம் ஒரு திருக்குறள்



**ஊக்கம் உடைமை**

உடைய ரெனப்படுவ தூக்கம் அஃதில்லார்
உடைய துடையரோ மற்று.

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

குறள்:591

# இரட்டைப் பரிசு




**நகரத்தின்** நெருக்கடியான சாலையில் பேருந்து கடுமையான கூட்டத்துடன் மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. கூட்டத்தில் பெரும்பாலும் மாணவ, மாணவியர்தான் இருந்தனர். மாணவர்களில் சிலர் பேருந்தின் படிக்கட்டுகளில் தொங்கியபடி ஆபத்தான பயணம் செய்தனர். சிலர் பேருந்து நகரும்போது, ஓடி வந்து ஏறி சாகசம் செய்தனர்.

அந்த பேருந்தில் இடம் இல்லாமல், பெரியவர் ஒருவர் தவித்துக் கொண்டிருந்தார். வேந்தன் இருக்கையில் அமர்ந்தபடி, அதை கவனித்தான்.

உடனே இருக்கையில் எழுந்து அவருக்கு உட்கார இடம் கொடுத்தான். அதைப் பார்த்த சக மாணவன் சித்திரை பாண்டி, "இவர் பெரிய தர்மதுரை இருக்கிற இடத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டார்" என்று கேலி செய்தான்.

பள்ளிக்கூடம் அருகில் வந்ததும், பேருந்தே காலியானது போல் இருந்தது. பெரும்பாலானவர்கள் அந்த நிறுத்தத்தில் தான் இறங்கினர்.

பள்ளிக்கூடத்தில் இலக்கிய விழா நடந்து கொண்டிருந்தது. நடுவர் ஒவ்வொரு போட்டிக்கும் பரிசுக்குரியவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார். "இலக்கிய விழாவில் தொடர்ந்து நடைபெற இருப்பது பேச்சுப் போட்டி" என்று அறிவிக்கப்பட்டது. மாணவர்கள் "மனித நேயம் என்ற தலைப்பில் மாணவர்கள் ஒவ்வொருவரும் பேசினார்கள்.

மனிதநேயம் என்பது வெறும் பேச்சில் மட்டும் இருக்கக்கூடாது செயலிலும் இருக்க வேண்டும். இன்று காலை நான் மாணவர்கள் வந்த பேருந்தில் தான் பயணம் செய்து இங்கு வந்தேன். மாணவர்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை அறியவே பேருந்தில் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தேன். எத்தனையோ மாணவர்கள் பயணம் செய்த அந்த பேருந்தில், பெரியவர் ஒருவருக்கு இடம்கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் வேந்தன் என்ற மாணவனுக்கு மட்டும்தான் ஏற்பட்டது.

ஒவ்வொருவரும் 'மனிதாபிமானம்' என்ற தலைப்பில் பேசி அசத்திக் கொண்டிருந்தனர்.

பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான முடிவு அறிவிக்கப்பட்டது. அப்போதுதான் வேந்தனுக்கு நடுவராக வந்தவர், தன்னுடன் பேருந்தில் வந்த பெரியவர் என்பது தெரிந்தது.

முதல் பரிசு பெறும் மாணவன் வேந்தன், இரண்டாம் பரிசு நாதன், மூன்றாம் பரிசு பெறுபவர் வள்ளி என்று அறிவித்துக் கொண்டிருந்தார்.


தொடர்ந்து நடுவர் பேசினார்.

அவன் பேச்சில், வெற்றி பெற்றான் என்பது பெரிய விஷயம் அல்ல. அதை செயலிலும் செய்துகாட்டி இருக்கிறான். அவனுக்கு என் சார்பில், ஐநூறு ரூபாயை பரிசாகத் தருகிறேன்." என்று வேந்தனை மேடைக்கு அழைத்தார், நடுவர்.

மாணவர்களின் பலத்த கைதட்டல்களோடு, வேந்தன் இரட்டைப் பரிசைப் பெற்றான்.

## வாரம் ஒரு நாடு

# குவைத்




**தலைநகர்:** குவைத் நகரம்
**பரப்பளவு:** 17 ஆயிரத்து 818 சதுர கிலோமீற்றர்
**மக்கள் தொகை:** 29 இலட்சத்து 85 ஆயிரம்
**மொழி:** அரபிக், ஆங்கிலம்
**நாணயம்:** குவைத் தினார்
**மதம்:** இஸ்லாம் **எழுத்தறிவு:** 83.5 சதவீதம்
**அமைவிடம்:** அரேபிய தீபகற்பத்தின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. இதன் தெற்கில், சவூதி அரேபியாவும், வடக்கு மற்றும் மேற்குப் பகுதியில் ஈராக்கும் அமைந்துள்ளன. குவைத் 6 மாநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை பல மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.
குவைத் உலகில் பெற்றோலிய உற்பத்தியில் நான்காவது இடத்தை வகிக்கிறது. உலகத்தில் பெற்றோலிய ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
**தொழில்கள்:** இறால் வளர்ப்பு, உரத்தொழில், கட்டடப் பொருட்கள் மற்றும் இரசாயன உற்பத்தி

# துப்பாக்கி சுடுதல்




விளையாட்டுப் போட்டிகளில் துப்பாக்கிச் சுடுதல் ஒரு முக்கியமான போட்டியாகும். இதில் ப்ரீ ரைபிள் மற்றும் ஸ்டாண்டர்ட் ரைபிள் பயன்படுத்தப்படுகிறது. இவற்றில் ப்ரீ ரைபிள் 8 கிலோகிராம் எடையிலும், ஸ்டாண்டர்ட் ரைபிள் 5 கிலோகிராம் எடையிலும் தயாரிக்கப்படுகிறது. துப்பாக்கிகள் மரம், சரியான அளவுள்ள மேல் எடைப்படும் இரும்புக் குழாய்களால் தயாரிக்கப்படுகின்றன. இவ்வகைத் துப்பாக்கிகள் தயாரிக்க பெரும்பாலும் வோல்நட் மரத்தை பயன்படுத்துகின்றனர்.

தயாரிக்கும்போது துப்பாக்கிகளின் அளவு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அளவில் மாறுபாடுகள் ஏற்படும்போது சரியாக குறி பார்த்து சுட முடியாது. தற்போது எலக்ட்ரிக் டிரிக்கரைப் பயன்படுத்துகின்றனர். குறிபார்த்து சுடும்போட்டியில் மூவிங் டார்க்கெட் என்ற போட்டி உண்டு. இது 50 மீற்றர் தூரத்தில் உள்ள நகரும் இலக்கைக் குறி பார்த்து சுட வேண்டும்.


# மரத்தின் வயதைக் கண்டறிவது எப்படி?

பாதியாக வெட்டப்பட்ட மரத்தில் வட்டமான கோடுகள் காணப்படும். இவை இலைகளுக்காக நீரை மண்ணில் இருந்து உறிஞ்சி அனுப்பும் குழாய் போன்று செயல்படுகிறது. இது மரத்தின் மையப்பகுதியில் இருந்து அலை போன்று ஒவ்வொரு இலையுதிர் காலங்களிலும் வரிகளை விட்டு விலகிச் செல்கின்றன. மரத்தின் அடியில் இருந்து உச்சிப்பகுதி வரை நீரைக் கடத்துகிறது. இதனால், மரம் நன்றாக வளர்கிறது. இலைகள் பச்சையம் தயாரிக்கவும், மரத்தின் வளர்ச்சிக்கும் உதவுகிறது. நிலத்தில் புதைந்து விடும் மரங்கள் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு பின் நிலக்கரியாக மாறிவிடுகிறது. இதுபோன்ற நேரங்களில் 'கார்பன்-டேட்டிங்' என்ற முறைப்படி மரத்தின் வயதைக் கண்டறிகின்றனர்.

# பாப்பா முரசு




## ஒளியை அளவிடும் முறை



போட்டோ எலக்ட்ரிக் என்ற போட்டோ மீற்றர் கருவி தான் ஒளியை அளக்க உதவுகிறது. இதில் உள்ள எலக்ட்ரோன் குழாய்களில் பெரும்பாலும், ஒளியை கவரக்கூடிய கததோட் அல்லது ஒளி கவரும் செமி-கெண்டக்டர்களைப் பயன்படுத்துகிறார்கள். இது நாம் ஒளி அளவை காண பயன்படுத்தும் போது ஒளி அடர்வு செமி-கெண்டக்டர்கள் மூலம் உணர்ந்து திரையில் அளவீட்டை பார்த்துக் கணக்கிடலாம்.

இது பெரும்பாலும் சினிமாவில் பயன்படுத்தப்படுகிறது. அதிகளவில் ஒளி பாய்ச்சும்போது பிலிமில் பதியும் ஒளியையும் கணக்கிட வேண்டும். அதனால், ஒளியின் அளவை இந்த மீற்றரால் சரியாக கணக்கிட முடியும். ஒளியானது வைப்ரேஷனால், உருவாகிறது என்ற தத்துவத்தை முதலில் சொன்னவர் அல்பேர்ட் ஐன்ஸ்டீன்.



## வழிகாட்டுங்கள்

பசியால் வாடும் மாட்டுக்கு, வைக்கோல் இருக்குமிடம் செல்ல வழிகாட்டுங்கள்

# தகவல் களஞ்சியம்

* உலகின் முதல் விண்வெளி வீரர், யூரி காகரின். முதன்முதலில் பூமியை வலம் வந்த விண்வெளி வீரரும் இவர்தான். *(12.4.1961)*

*முதல் விண்வெளி வீராங்கனை ரஷ்யாவைச் சேர்ந்த வாலன்டினா தெரஷ்கோவா *(16.6.1963)*

*அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரர், அலன் ஷெப்பர்ட் *(5.5.1961)*

*இந்தியாவின் முதல் விண்வெளி வீரர், ராகேஷ் சர்மா *(3.4.1984)*

* இந்தியாவின் முதல் விண்வெளி வீராங்கனை, கல்பனா சாவ்லா *(19.11.2003)*

*சீனாவின் முதல் விண்வெளி வீரர்,

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் வண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டிய பத்துபேருக்கு பரிசுகள் காத்திருக்கின்றன. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.02.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல.927**
**தினமுரசு வாரமலர்**

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:107, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 925**

**பரிசுக்குரியவர்:** பாத்திமா ஹம்னா, ஹிங்குராகொட மு.வி. ஹிங்குராகொட.

பாராட்டுக்குரியவர்கள்

01. ஆர்.சிமோன் அகுஸ்ரோ, மட்டக்களப்பு வீதி, கல்லடி.
02. பா.தேனுஜன், தாளையடி.
03. சி.லதுஷ்க், காவெட்டி
04. எ.சுபீந்தன், யாழ்ப்பாணம்.
07. ஏ.எச்.எம். நஷ்பியா, அட்டப்பளம் வயல், கிண்ணியா-05.
08. மு.மீதுஷன், சித்தன்கேணி, யாழ்ப்பாணம்.
09. ஆ.சங்கரி, முதலைப்பன்கட்டு, ஓட்டுசுட்டான்.
10. தே.வதுஷன், சாவியா வீதி, காத்தான்குடி-01.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடல் இல்லாத படத்திற்கு விஜய் ஆண்டனி ஆதரவு

கொலிவூட்டில் பாடல்கள் இல்லாமல் படங்கள் வருவது நல்ல விடயம் என்று இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி கூறியுள்ளார். பாடல்கள் இல்லாமல் கொலிவூட்டில் திரைப்படங்கள் திரையிடப்பட்டால் அவை உலகளவில் பேசப்படும்.

இதுகுறித்து விஜய் ஆண்டனி கூறியதாவது, தமிழ் சினிமாக்களில் பாடல்கள் வருகிற வரை ஓஸ்கார் விருது கிடைக்காது. இதனால் இசையமைப்பாளர்களாகிய எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. எங்களுக்கு பின்னணி இசை இருக்கிறது. அல்பம் செய்து விட்டு போய் விடுவோம். பாடல் என்பது சுத்தமாக வெறும் கதை தான். நடைமுறையில் ஒரு திரைப்படத்தை உருவாக்குவதற்காக அறிமுகப்படுத்தப் பட்டவையே பாடல்கள் என்று கூறியுள்ளார்.




# புதிய முயற்சியில் பிரபுதேவா

பிரபுதேவா தற்போது சிறுத்தை திரைப்படத்தின் ஹிந்தி பதிப்பான ரவுடி ரத்தோர் திரைப்படத்தை இயக்கி வருகிறார். இதற்கிடையே தன் நண்பர்களுக்காக ஓர் நடன அல்பம் தயாரிக்கும் பணியில் அவர் மும்மூரமாக ஈடுபட்டு வருகிறார்.

இந்த காணொளி அல்பத்தில் 5 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களுக்கு இசையமைத்து, நடனமாட பிரபுதேவா திட்டமிட்டுள்ளார். மும்பையில் 7D கெமராவில் இதற்கான படப்பிடிப்பை நடத்தவுள்ளார்கள். இந்த அல்பம் உலகத் தரத்திற்கு நிகராக இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாகவுள்ளார் பிரபுதேவா.

ஓடியோ அல்பத்தை காதலர் தினமான ... திகதியும், காணொளி அல்பத்தை பிரதே... ஏப்ரல் 3ஆம் திகதியும் வெளியிடவுள்ளா... பிரபுதேவா நடனத்திற்கு உலகம் முழுவ... இந்த அல்பம் வெளியிட்ட பின்னர் அ... பல்வேறு நாடுகளுக்கு தன் குழுவி- பிரபுதேவா திட்டமிட்டுள்ளதாக வெளியாகி





# மீண்டும் இணைகின்றனர் சூப்பர் ஸ்டார்கள்

ஹிந்தி சூப்பர் ஸ்டாரான அமிதாப் பச்சனும், தமிழ் சூப்பர் ஸ்டாரான ரஜினி காந்தும் மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளனர். 28 ஆண்டுகளுக்கு முன்பு ராமாராவ் தயாரித்த அந்தா கானூன் திரைப்படத்தில் ரஜினியும், அமிதாப் பச்சனும் இணைந்து நடித்துள்ளனர். தற்போது பூரி ஜெகன்னாத் இயக்கும் ஓர் ஹிந்தி திரைப்படத்தில் இந்த இரு சூப்பர் ஸ்டாரும் இணைந்து நடிக்கவுள்ளனர். இதுகுறித்து பூரி ஜெகன்னாத் கூறுகையில், சமீபத்தில் நான் ரஜினி அவர்களை சந்தித்துப் பேசினேன்.

அமிதாப் பச்சனை வைத்து நான் இயக்கப் போகும் புதிய படத்தில் நீங்களும் இடம்பெற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். உடனே அதை அவர் ஏற்றுக் கொண்டார். மேலும் அமிதாப்பச்சனுடன் மீண்டும் இணைந்து நடிப்பது குறித்து அவர் பரவசமாகவுள்ளார். நீண்ட காலமாகவே ரஜினியுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது எனது ஆசை. முயற்சித்தும் கொண்டிருந்தேன். ஆனால் இப்போதுதான் அது கை கூடியுள்ளது. அதேசமயம் இரு பெரும் சூப்பர் ஸ்டார்களான அமிதாப் மற்றும் ரஜினியை இணைத்து இயக்கப் போவது எனக்கு மலைப்பாகவுள்ளது என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காதலுக்குக் கிடைத்தது மரியாதை! மகிழ்ச்சியில் திளைக்கிறது ஜோடி!

கொலிவூட் நடிகை ஜெனிலியாவுக்கும், பொலிவூட் நடிகர் ரிதேஷ் தேஷ்முக்குக்கும் மும்பையில் எதிர்வருகிற பெப்ரவி 4ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது. திருமணத்திற்கு மறுநாள் வரவேற்பு நிகழ்ச்சி நடக்கிறது. இதற்காக அங்குள்ள ஹயாத் ஶ்ரீகென்சி நட்சத்திர விடுதியில் அறைகள் மற்றும் அரங்குகளை மூன்று நாட்கள் வாடகைக்கு எடுத்துள்ளனர்.

தங்களது திருமணத்தையொட்டி நடிகர், நடிகைகளுக்கு ஜெனிலியாவும் ரிதேஷும் இணைந்து விருந்து கொடுத்தனர். இந்த விருந்து நிகழ்ச்சியில் நடிகர், நடிகைகள் குடும்பத்தோடு வந்து கலந்து கொண்டார்கள். இந்தி நடிகைகள் தீபிகா படுகோனே, ஜெரினாகான், நேகா துபியா, ஜியா-கான், சமீராரெட்டி, சுஷ்மாரெட்டி, பெராகான், அமிஷா படேல், நடிகர்கள் கரன்ஜோகர், ஜாயித்கான், சஞ்சய்தத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். அனைவரும் ஜெனிலியாவுக்கும் ரிதேசுக்கும் வாழ்த்து தெரிவித்தனர். விருந்தில் ஜெனிலியாவும் ரிதேஷும் காதல் உணர்வு ததும்ப மகிழ்ச்சியோடு இருந்ததாக நடிகைகள் தெரிவித்தனர்.

ஜெனிலியாவும் ரிதேசும் ஆறு ஆண்டுகளாக காதலித்தனர். இரு வீட்டு பெற்றோரும் காதலை எதிர்த்ததால் அவர்களை சமரசப்படுத்தும் முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டனர். கடந்த மாதம் தான் பெற்றோரிடம் இருந்து சம்மதம் கிடைத்தது. உடனடியாக திருமணம் செய்துகொள்ள உள்ளனர்.

பில்லா-II

...மான பெப்ரவரி 14 ஆம் ... பிரதேவாவின் பிறந்த நாளான ...வுள்ளார்கள். ... முழுவதும் ரசிகர்கள் இருப்பதால், ...ர் அதை விளம்பரப்படுத்த ...வி- ...னருடன் செல்ல தகவல்கள் உள்ளன.

# மனம் திறக்கிறார் சகுனி இயக்குநர்

கொலிவூட்டில் கார்த்தி, ப்ரனிதா இருவரும் இணைந்து நடிக்கும் சகுனி படத்தை இயக்குனர் ஷங்கர் தயாள் இயக்கி வருகிறார். இப்படத்துக்காக போலந்து நாட்டில் பாடல் காட்சிகளை படமாக்கியது பற்றி அவர் பேசியுள்ளார்.

சென்னையிலிருந்து டெல்லி, ரஷ்யா, போலந்து நாட்டின் தலைநகரம் வார்ஸா என நீண்ட பயணம் செய்துள்ளோம். கடுங்குளிரையும், களைப்பையும் பொருட்படுத்தாமல் படக்குழு இயங்கியுள்ளது. போலந்து நாட்டிலும் சகுனி பட நாயகன் கார்த்தியை தேடி வந்து ரசிகர்கள் ஆட்டோகிராப் வாங்கிப்போனதை என்னால் எப்போதும் மறக்க முடியாது. இதையடுத்து போலாந்திலுள்ள உள்ளூர் தொலைக்காட்சியில் பங்கேற்று நிகழ்ச்சி ஒன்றை நடத்தியுள்ளதாகவும் இயக்குனர் கூறியுள்ளார். இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாசின் இசையில் பாடல்கள் அதிர வைக்கும். பாடல் காட்சிகள் கலகலப்பாக வந்துள்ளன. அனைத்துத் தரப்பு ரசிகர்களையும் நிச்சயம் கவரும் என்று இயக்குனர் ஷங்கர் தயாள் கூறியுள்ளார்.

# ஆன்மீக மோகத்தில் தமன்னா!

எப்போழுதும் ஹோமம், புனஸ்காரம் என்று புகையும், பூஜையுமாக நடிகை தமன்னா பிசியாகவுள்ளார். ஒரு காலத்தில் தமன்னாவுக்கு தமிழில் நல்ல மவுசு இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தனுஷ்"டன் ஜோடி சேர்ந்து நடித்த வேங்கைக் குப் பிறகு அவருக்கு தமிழில் வாய்ப்புகள் வரவில்லை.

ஆனால் தெலுங்கில் பிசியாக நடித்து வருகிறார். தற்போது ஆன்மீகத்தில் அதிக ஆர்வம் காட்டிவரும் தமன்னாவைப் பார்ப்பவர்கள் மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். ஹைதராபாத்தில் உள்ள கோவில்களுக்கு அடிக்கடி செல்வதை ஒரு வழக்கமாக அவர் வைத்துள்ளார். மும்பைக்கு சென்றால் தனது வீட்டில் ஹோமம், பூஜை நடத்தி வரும் தமன்னா, அவர் செல்லுமிடம் அனைத்தையும் பக்தி மயமாகவே அமைத்து வருவதாக தகவல்கள் வெளியாகி வுள்ளன.



# வாட்டி எடுக்கிறார் பாலா

இயக்குனர் பாலா திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்றால் அழகாக இருப்பவர்கள் முதலில் அசிங்கமாக மாற வேண்டும் என்பது தான் முதல் தகுதி. நடிகர்கள் விக்ரம், விஷால், ஆர்யா என அவர் படத்தில் நடித்த எல்லோருமே அப்படித்தான் தோன்றியுள்ளனர். தற்போது இயக்குனர் பாலா, நடிகர் அதர்வாவை வைத்து உருவாக்கி வரும் திரைப்படம் எரியும் தணல். இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கும் வேதிகா, இயல்பாக இருக்க வேண்டும் என்பதற்காக ராமாநாதபுரம் வெயிலில் அவரை இயக்குனர் பாலா வாட்டியெடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகிவுள்ளன.

# திருப்பங்கள்



...னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் கிண்ணம்

## மனசெல்லாம் நீயே

சிறகு விரித்து பறந்து
திரிந்த என் மனதை
சிறைப்பிடித்து விட்டவனே
கள்ளங் கபடமில்லாது
சுற்றி வந்தேன்
கட்டிப் போட்டு விட்டாய்
உன்னிடத்தில்
புன்னகை தவழும் உன்
பூ முகத்தைப் பார்த்ததும்
பறி கொடுத்தேன்
என் மனதை
கொள்ளை அழகுடையோனே!
ஓடிவா! உன்
தாய் கைவிடுத்து
நானும் நீயும்
நடந்திடுவோம்
கை கோர்த்தே நெடுநேரம்.

ஆஷா,
யாழ்ப்பாணம்.

## அஜீரணம்

மேகமாய் அலையவும்
ஆசை வந்தது
நீ... நிலவாய்
இருந்தகால்!

என்னை...
நோகடிப்பதற்கான
முன் அறிவிப்பா...?
உன் முறாய்ப்பு!

இருண்டு போன - என்
இளமைக்குள்
சுடராக எரிந்தவள்
நீ...

ஒவ்வொரு தடவையும் - நான்
அழும் போதும்
கண்ணீர்த் துளிகளின்
கனத்தில் நீ தெரிவாய்!

மனசு பறிபோகுமென்று
தெரியவில்லையே-
உன்னைத்...
தூரத்திவரும் போது

நீ என்னைக் காதலிக்கிறாயா...?
என்பது - இன்றுவரைக்கும்
கேள்விக்குறிதான்!

## நிம்மதியில்லை!

உள்ளத்தில் நிம்மதியில்லை
கண்களில் உறக்கமில்லை
கண்காணிக்கிறேன் உன்னை
காணவில்லை நீதான்.

புரியாமல் தவிக்கிறேன்
அமைதியின்றி கலங்குகிறேன்
நடைகளில ஓர் மாற்றம்
வார்த்தைகளில் பல மாற்றம்.

என்னாச்சோ ஏதாச்சோ
தெரியாது விழிக்கிறேன்
புரியவில்லை உனக்கு.

உணவின்றி பல நாள்
உறக்கமின்றி பல ராத்திரிகள்

என்னை நானே கவனிப்பதில்லை
என்னில் பல மாற்றம்
அதை நீ அறியவில்லை.

செல்வந்தி,
அல்வாய் வடமேற்கு.

திருமணம் செய்யும் வயதை நான் எப்போதோ தாண்டிவிட்டேன் என்று கூறியுள்ளார் அமெரிக்காவின் ஓப்ரா வின்பிரே.

ஜெய்ப்பூர் இலக்கிய விழாவுக்கு வந்திருந்தார் ஓப்ரா வின்பிரே. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில் தனது தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும் மனம் திறந்து பேசினார்.

வின்பிரேவின் பேட்டியிலிருந்து சில துளிகள்...

திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழும் சுதந்திரத்தைக் கொண்டுள்ள நாட்டில் நான் வசிக்கிறேன். திருமணம் செய்வதா, வேண்டாமா என்பதை சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமை அங்குள்ளவர்களுக்கு உண்டு.

இத்தனை காலமாக நான் ஏன் திருமணம் செய்யவில்லை என்பதற்கு என்னிடம் பதில் இல்லை. ஒரு வேளை நான் திருமணம் செய்திருந்தால் அவர் நிச்சயம் மிகச் சிறந்த கணவராக இருந்திருப்பார். அதே சமயம், இந்நேரம் நாங்கள் விவாகரத்தும் செய்திருப்போம். அதையும் நான் சொல்லியாக வேண்டும்.

நான் சுயம் நிறைந்த ஒரு பெண். என்னைப் போல இன்னொருவரைக் காண்பது கடினம். அதை மற்றவர்களிடம் எதிர்பார்க்கவும் முடியாது. மேலும் திருமணம் என்பது ஒரு வகையான கட்டுப்பாடாகவும் மாறிவிடுகிறது.

இந்தியாவில் திருமண உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளது. முதலில் பெற்றோர் பார்த்து கல்யாணம் செய்து வைக்கிறார்கள். பின்னர் காதலில் அந்தத் தம்பதிகள் விழுகிறார்கள். பின்னர் வாழ்க்கை இனிமையாகப் போகிறது. மிகவும் அருமையான விஷயம் இது. பாராட்டுக்குரியதும் கூட. ஆனால் எனக்கு இது சரிப்பட்டு வராது என்றே நினைக்கிறேன். அப்படிப்பட்ட கலாசாரத்தில் நான் வளரவில்லை என்பது அதற்குக் காரணமாக இருக்கலாம். மேலும் இப்போது என்னால் திருமணம் குறித்தெல்லாம் நினைக்கவே முடியவில்லை. அந்த வயதைத் தாண்டிப் போய் விட்டேன்.



## கல்யாணத்துக்குப் பின் காதல்

**–ஓப்ரா வின்பிரே**

எனக்கு 30 வயது இருக்கும்போது ஒருவருடன் நிச்சயதார்த்தம் நடந்தது. பிறகு எனக்கு சந்தேகம் வந்துவிட்டது. என்னை, அவரால் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியுமா என்பதே அந்த சந்தேகம். இதனால் அந்தப் பந்தம் பாதியிலேயே முடிந்து போனது என்றார் ஓப்ரா.

கடவுள் குறித்த கேள்விக்கு ஓப்ரா பதிலளிக்கையில், வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாக நான் நினைப்பது இளம் வயதில் நான் ஏழையாக இருந்ததைத்தான். எனது பாட்டிக்கு அப்போது இருந்த பெரிய கனவெல்லாம், நான் என்னை மதிக்கக் கூடிய ஒருவர் வீட்டுக்கு வேலைக்காரியாகப் போக வேண்டுமே என்பதாகத்தான் இருந்தது.

அவர்தான் எனக்கு கடவுள் நம்பிக்கையை ஊட்டியவரும் கூட. நானும் கடவுளை நம்பினேன். எனது தந்தையாக கடவுளை கருதினேன் -காரணம் எனது தந்தை யார் என்று எனக்குத் தெரியாது என்பதால். கடவுளுக்கும், எனக்கும் இடையே நெருங்கிய பந்தம் உண்டு. அதை நான் எப்போதும் பேணிக் காத்து வருகிறேன் என்றார் ஓப்ரா.

## விழுதென தாங்கினாள்

தேடி வந்து என்னிடத்தில்
தேனைவிட காதல் என்றாள்
தேடுவாரற்று இருந்த என்னிடத்தில்
தேயாதா இது என்றாள்.

விழுதென தாங்க வந்தவள்
விழுத்தி நின்றாள் காதல் வலையில்
வீணையென நான் இசைத்தேன்
விடாதே பிடியென்றாள்.

நாயகியே என் தேவதையே
நான் நேசிக்கும் காவலியே
நான் நானாக வேண்டும் என் கையிலே
நாடி வந்து தாடிவைத்த கோதையே.

தேவியே எந்தன் ஆவியே
தேவையெல்லாம் நீதானே
தேடல் என்பது உள்வரை
தேனிலவாய் காதல் ருசி இதுதானோ.

ஜெயம் ஜெகன்,
புதுக்குடியிருப்பு.

## என் உயிர்க் கடிகாரம்

உன்னைப் பார்த்த முதல் நிமிடம்
காதலின் முதல்வரி எழுதத் தொடங்கினேன்
பிறகு எனது உயிர் முகவரி அன்பே
உன்னிடம் மாறியது.

உனைப் பார்க்கும் ஒவ்வொரு நாளும்-உலகில்
எனக்கு நீ தீபாவளி
அன்பே உன் குரல் கேட்டால் போதும்
அதுதான் இங்கே என் காதல் அஞ்சலி
நீ எதிர்வரும் சமயம் புன்னகையால் எனது
முகத்தை அலங்கரிப்பேன் -கடந்து போனதும்
கவலையாலே கண்கள்
இரண்டிலும் நீர் வடிப்பேன்.

உன் காலடிச் சுவடுகள் கலைந்தாலும் -இந்தக்
காதலி இருதயம் தாங்காது
நீ ஒரு நொடி நேரம் பிரிந்தாலும்
என் உயிர் கடிகாரம் ஓடாது அன்பே.

ந.தீபா,
மாகியப்பிட்டி.

## பெண்ணே...!

தொலையாது உன்
நினைவுகளுடன்
நீ வரும் தெருக்களில்
காத்துக் கிடக்குமென்னை...
ஒவ்வொரு நாளும் கடந்து
செல்லும் நீ...
ஒரு விநாடியாவது
என்னைக் கண்டு கொள்ள
மாட்டாயா?

பெ.விபுவெள்ளி (நந்து)
மன்னார்.

## காயம்

காதலில்
கவிதையை விட
கண்ணீருக்கு அர்த்தம் அதிகம்
என் ஆயிரம் கவிதைகளில்
கரைந்து போகாத உன் மனசு
நீ விரும்பாத போது...
நான் வடித்த ஒரு சொட்டு
கண்ணீரில் கரைந்து போனதடி...!

ஜே.பிரோஸ்கான்,
கிண்ணியா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களுக்கு கண்ணதாசன் வசனம்

பாடல் ஆசிரியராகப் புகழ் பெறத்தொடங்கிய அதேவேளையில், கதை, வசன ஆசிரியராகவும் முத்திரை பதித்தார், கண்ணதாசன்.

மோடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த 'இல்லற ஜோதி' என்ற படத்துக்கு கதை, வசனம், பாடல் எழுதினார். இதில் சிவாஜிகணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சனி ஆகியோர் நடித்தனர். சிவாஜிகணேசன் கவிதை உள்ளம் நாடகம் திகழ்ந்தது. இதன்பின் சிவாஜிகணேசன் நடித்த 'தெனாலிராமன்', 'நானே ராஜா' படங்களுக்கும், எம்.ஜி.ஆர். நடித்த 'மதுரை வீரன்', 'ராஜா தேசிங்கு' ஆகிய படங்களுக்கும் கண்ணதாசன் வசனம் எழுதினார்.

எம்.ஜி.ஆர். சொந்தமாக தயாரித்த 'நாடோடி மன்னன்' படத்துக்கு, கண்ணதாசனும், ரவீந்தரும் இணைந்து வசனம் எழுதினர். கண்ணதாசன் கதை, வசனம் எழுதுவதிலும் திறமை காட்டினார் என்றாலும், பாடல்கள் எழுதுவதில் முடிசூடா மன்னராக விளங்கினார். காதல், சோகம், தத்துவம் என்று எதுபற்றி வேண்டுமானாலும், நினைத்த மாத்திரத்தில் பாடலை எழுதும் திறமை அவருக்கு இருந்தது. ரசிகர்கள் மட்டும் அல்லாது, பட அதிபர்கள்,

**ரசிகர்கள் மட்டும் அல்லாது, பட அதிபர்கள், இசை அமைப்பாளர்கள், நடிகர், நடிகைகள் அனைவரும் அவருடைய பாடலை விரும்பினர். அவருடைய பாடல்களில் கருத்தாழம் இருந்தது, சொல்லாட்சி இருந்தது. பாடல் எழுதித்தரும்படி கேட்டு, பட அதிபர்கள் அவர் வீட்டில் தவம் கிடக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இரவு- பகலாக அவர் பாடல் எழுத நேரிட்டது.**

படைத்தவர். அவர் மனைவி ஸ்ரீரஞ்சனியோ, அதிகம் படிக்காத கர்நாடகம். இந்நிலையில், நடனத்தில் திறமை படைத்த, அதிசயம் படித்த பத்மினியின் அறிமுகம் சிவாஜிக்கு கிடைக்கிறது.

இந்த முக்கோண காதல் கதையை திறம்பட கையாண்டிருக்கிறார், கண்ணதாசன். டி.ஆர். சுந்தரம் தயாரித்த இந்தப் படத்தை, ஜி.ஆர்.ராவ் டைரக்ட் செய்தார். படம் தயாரானதும், முதல் பிரதியை டி.ஆர். சுந்தரம் போட்டுப்பார்த்தார். படம் நன்றாக இருந்த போதிலும், ரசிகர்களை கவர்ந்திழுக்க இன்னொரு அம்சம் தேவை என்று கருதினார். சுந்தரம் கேட்டுகொண்டபடி, 'அனார்கலி' ஓரங்க நாடகத்தை கலைஞர் எழுதிகொடுத்தார். சலீமாக சிவாஜியும், அனார்கலியாக பத்மினியும் நடித்தனர். 'இல்லற ஜோதி'யின் சிறப்பு அம்சமாக இந்த ஓரங்க

இசை அமைப்பாளர்கள், நடிகர், நடிகைகள் அனைவரும் அவருடைய பாடலை விரும்பினர். அவருடைய பாடல்களில் கருத்தாழம் இருந்தது. சொல்லாட்சி இருந்தது. பாடல் எழுதித்தரும்படி கேட்டு, பட அதிபர்கள் அவர் வீட்டில் தவம் கிடக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இரவு - பகலாக அவர் பாடல எழுத நேரிட்டது.

கண்ணதாசன் பாடல் இடம் பெறாத படங்களே இல்லை என்ற அளவுக்கு, எல்லா படங்களிலும் அவரது பாடல்கள் இடம்பெறலாயின. கண்ணதாசன் எழுதிய சில தத்துவப் பாடல்கள் வருமாறு:-

"போனால் போகட்டும் போடா, இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?" (படம்: பாலும் பழமும்). கவிஞரின் இந்த பாடலை டி.எம்.சௌந்தரராஜன் பாட அதற்கு சிவாஜிகணேசன் நடித்த காட்சி, ரசிகர்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றதாகும்.

"வீடுவரை உறவு வீதி வரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ?" (படம்: பாதகாணிக்கை). "மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்" (படம்: பாவமன்னிப்பு). "நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்", "எங்கிருந்தாலும் வாழ்க" (படம்: நெஞ்சில் ஓர் ஆலயம்). "உன்னைச்சொல்லி குற்றமில்லை" (படம்: குலமகள் ராதை). "கடவுள் மனிதனாக பிறக்க வேண்டும். அவன் காதலித்து வேதனையில் வாடவேண்டும்" (படம்: வானம்பாடி). "உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது" (படம்: கர்ணன்). "பாசமலர்" படத்தில் வரும் "மலர்ந்தும் மலராத" பாடல் தேன்மாரி பொழிவதாக இருந்தது.



"உள்ளம் என்பது ஊமை" (பார்த்தால் பசி தீரும்), "பிறக்கும் போதும் அழுகிறான், இறக்கும்போதும் அழுகிறான்" (கவலை இல்லாத மனிதன்), "ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ" (பாகப்பிரிவினை), "எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி" (புதிய பறவை), "சோதனை மேல் சோதனை போதுமடா சாமி" (தங்கப்பதக்கம்), "பாட்டும் நானே பாவமும் நானே" (திருவிளையாடல்), "நிலவைப் பார்த்து வானம் சொன்னது" (சவாலே சமாளி) போன்ற பாடல்கள் நிரந்தரமான "சூப்பர் ஹிட்" பாடல்கள்.

எம்.ஜி.ஆர். படங்களுக்கும் ஏராளமான பாடல்களை கண்ணதாசன் எழுதி இருக்கிறார். 'மன்னாதி மன்னன்' படத்தில் வரும் "அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடைமையடா" என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றது. 5 ஆயிரம் திரைப்படப் பாடல்கள் எழுதி இருக்கிறார். 4 ஆயிரம் தனிக்கவிதைகள் படைத்துள்ளார். தொடக்க காலத்தில் கண்ணதாசன் தீவிர அரசியலில் ஈடுபட்டு வந்தார்.

ஈ.வெ.கி.சம்பத் தி.மு.க.வை விட்டு விலகியபோது, இவரும் விலகினார். இருவரும் சேர்ந்து தமிழ் தேசிய கட்சி என்ற புதுக்கட்சி தொடங்கினர். 1964இல் தமிழ் தேசிய கட்சி காங்கிரசுடன் இணைந்தது. மறைந்த பெருந்தலைவர் காமராஜரிடம் கண்ணதாசன் மிகுந்த பக்தி கொண்டவர். பிறகு கொஞ்ச காலத்தில் அரசியலில் இருந்து ஒதுங்கி வாழ்ந்தார். சினிமாவுக்கு பாட்டெழுதுவதிலும், நாவல்கள் எழுதுவதிலும் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தினார். கண்ணதாசன் அவ்வப்போது நாடகங்களிலும் நடிப்பது வழக்கம். காங்கிரசில் இருந்தபோது, தேர்தல் பிரசாரத்துக்காக சில நாடகங்களை நடத்தினார்.

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 10

204



ஆனால், அவர்களுக்கு வருகின்ற கஷ்டம் இருக்கிறதே, அது நிச்சயமாக, தற்கொலை செய்து கொள்ளலாமா என எண்ணும் அளவுக்குத் தோன்றும்.

"எப்போது அது வரும்? என்றைக்கு அந்தத் தீர்ப்பு ஆண்டவனிடமிருந்து கிடைக்கும்?" என்று நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது.

சிலபேர் ஏழு வருஷங்களில் தண்டிக்கப்படுகிறார்கள். சில பேர் ஒன்பது வருஷங்களில் தண்டிக்கப்படுகிறார்கள். சில பேர் இருபது வருஷங்களில் தண்டிக்கப்படுகிறார்கள்!

கடைசி அடி என்பது சரியான மரண அடியாக இருக்கும்.

ஒரு பக்கம் அயோக்கியர்கள் இருந்துகொண்டேதான் இருப்பார்கள்.

அவர்கள் ஆரவாரம் செய்துகொண்டேதான் இருப்பார்கள்.

அந்த ஆரவாரத்தைப் பார்த்து, நாம் நல்லவனாக இருந்தும் நமக்கு எதுவும் இல்லையே? சீ! இது என்ன தெய்வ நம்பிக்கை? என்று நாம் கலங்கிவிடக் கூடாது.

பற்றிய கைகள் அப்படியே தெய்வத்தைப் பற்ற வேண்டும். அப்படியே, அவனைப் பின்பற்றித் தொடருமானால் நல்லவர்களுடைய குடும்பம், ஏழேழு தலைமுறைக்கும் நிம்மதியாக இருக்கும்.

அயோக்கியர்களுடைய குடும்பம், ஏழேழு தலைமுறைக்கும் கஷ்டப்பட்டே தீரும் என்பது ஆண்டவன் வகுத்து விட்ட விதி. ஆகவே, எனது இந்தத் தொடர் நூலைப் பத்துப் பாகங்களாகப் படிக்கின்றவர்கள், இந்த மயக்கத்திலே இருந்துவிடுபட்டால் மட்டும் போதும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

மற்ற விடயங்களையும், பத்தாவது பாகத்தில் கடைசியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எந்த ஒரு அயோக்கியனும் நிம்மதியாகச் செத்து, அவனுடைய குடும்பம் நிம்மதியாக வாழ்ந்ததாக வரலாறே இல்லை.

இதுவரையிலும் ஆண்டவன், ஒரு நியதியை அப்படி வகுத்து வைத்திருக்கிறான். ஒரு இயக்கத்தை அப்படி நடத்திக் கொண்டிருக்கிறான்.

இல்லையென்றால் உலகத்தில் போராட்டங்கள் ஏது?

அயோக்கியர்கள் இல்லையென்றால், இறைவன் இயக்கத்தைப் பற்றிய சிந்தனை ஏது?

ஆனால், அந்த மயக்கத்திலிருந்தும் நான் விடுபடுகிறேன். என் கண் முன்னாலேயே பல பேர் தண்டிக்கப்பட்டதைப் பார்த்து, முன்பும் எழுதியிருக்கிறேன். இப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்கிறேன். இன்னும் பார்த்துக்கொண்டும் இருக்கிறேன்.

மற்றவர்களுடைய தண்டனையையும் நான் பார்த்துவிட்டுத்தான் சாவேன் என்று கருதுகிறேன்.

ஆண்டவன் அந்த வாய்ப்பை எனக்கு அளிப்பானானால், நிச்சயமாக அயோக்கியர்கள், அக்கிரமக்காரர்கள் புழுப்போல் துடித்துச் செத்ததற்குப் பின்னாலேயே என்னுடைய மரணம் நிகழும். (தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழந்தையை அவர்கள் பத்திரமாக எடுத்துச் செல்வதைப் பார்த்தாள். அந்த கார் மூலை திரும்பும்வரை காத்திருந்தாள். 'அகல்யா.. இப்ப உனக்கு எங்க போகனும்? குழந்தைதான் இல்லையே.. எங்க வீட்டுக்கு வர்றியா..? படிக்கிறதுக்கு சௌகரியமா இருக்கும்' என்றாள் கிருத்திகா சாரி.

"இல்லை மேடம்... நான் பிளாட்டுக்கே போயிடுறேன். அங்க என் சொற்ப சாமான்கள் இருக்குது."

"பரீட்சை எழுதப்போறேதானே..?"

"தெரியலை மேடம்... எத்தனையோ விடயம் மனசுல ஓடிக்கிட்டிருக்கு. ஒரு கம்பியூட்டர் கிளாஸ்ல சேர்த்து வைச்சேன். அரைகுறையா நிக்குது. அங்க போய் விசாரிக்கனும். அதுக்கு முன்னாடி ஒண்ணு, ரெண்டு போன் பண்ணிக்கனும்..."

"நீ எப்ப வேணுமென்றாலும் என்னை வந்து சந்திக்கலாம்... என்ன உதவி வேணும் என்றாலும் கேட்கலாம்..." என்றாள் சாரி.

"மேடம், இனிமே நான் உங்ககிட்ட உதவிக்கு வரமாட்டேன்னு தோணுது.."

"ஏன்?"

"தப்பா நினைக்கதீங்க.. நீங்களும் அந்த ப்ரோ லைப்புக்கு என்னை மாதிரி பெண்களை அனுப்புறதில உடந்தைபோன்று எனக்குச் சந்தேகம் வந்திட்டுது.."

"என்ன?" என்று நெற்றியைச் சுருக்கினாள் சாரி.

"இந்தச் சந்தேகம் ஆதாரமற்றதாக இருக்கலாம். இருந்தும் மனசுல உறுதியாகாத வரையில் உங்ககூட பழகுறதுல பாசாங்கு தேவைப்படும்...அதனால..."

"அதனால? என்னம்மா நன்றியில்லாமப் பேசறியே... உனக்கு எத்தனை உதவி செய்திருக்கேன்...? நீ முன்னுக்கு வந்து, பெரிய ஐ.ஏ.எஸ். பதவிக்கு வரவேணும் என்று பிளான்

**சுவிஸ் தம்பதியினரை ஒரு வழியாகக் கொண்டு வந்து சேர்த்தார் ராபர்ட். குழந்தையைக் கண்டதும் அவர்கள் மனம் மகிழ்ச்சியால் பூரிப்படைந்ததும், குழந்தையைக் கொடுப்பதற்கு முன் ராஜேஸ்வரி அகல்யாவின் முழுமையான சம்மதத்தை வாங்கியதுடன் அதனை ஒலிநாடாவிலும் பதிந்து பத்திரப்படுத்திக்கொண்டாள். ஏனென்றால் இனியும் முன்னைய மாதிரியான நிகழ்வு நடக்காமலிருப்பதற்கு இது பெரும் உதவியாக இருக்கும் என அவள் நினைத்தாள். அகல்யா குழந்தையைக் கடைசியாகக் கொஞ்சும் போது அவளின் கண்களில் கண்ணீர் திரையிட்டுக் கொண்டது. அதனால் அவள் குழந்தையின் முகத்தை சரியாகப் பார்க்க முடியவில்லை.**

போட்டு, அதுக்காக சுபாஷினி மேத்தாக்கிட்ட ஏற்பாடு பண்ணி.. பாரு, அவ சொல்லித்தான் கவுன்சிலிங்குக்கு அனுப்பினது.. என்னையே சந்தேகப்படுறியே..."

"சந்தேகம் ஆதாரமற்றதா இருக்கலாம். எனக்கு இன்னும் தெளிவாகலை. தெளிவு வந்தப் புறம் நான் மறுபடி உங்ககிட்ட வந்து தேவைப்பட்டா மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்"

"நீ பெரிய மனுஷி மாதிரி பேசறியே?"

"அதுக்கான அனுபவம் இந்தச் சின்ன வயசில கிடைச்சுட்டுது மேடம்..."

"காலேஜ் வரப்போறியா, இல்லையா?"

"இல்லை! இனிமே சரஸ்வதி ஆட்ஸ் அண்ட் சயின்ஸ் பக்கம் தலை வைச்சுக் கூடப் படுக்கமாட்டேன். மோசமான ஞாபகங்கள்..."

"படிப்பு?"

"யோசிக்கிறேன்..." என்றாள்.

"அகல்யா உன் மனநிலையைப் புரிஞ்சுக்க. ஆனா, எனக்குக் கவலையா இருக்கு. ரொம்ப சினிக்கலா போயி, உன் நிஜமான நண்பர்களைக் கண்டுபிடிக்கிற தகுதியை இழந்துவிடாதே..."

"என் நண்பர்கள் யார் என்று இப்ப தெளிவாகவே இருக்கேன் மேடம்."

அகல்யா தன் தந்தைக்கு போன் செய்தாள்

"ராஜ் கிரானைட்ஸ்!"

"மிஸ்டர் ராமசாமி, ஜாரி ஆபிஸில் அவர் பேரு ராஜசேகர் இல்லையா? அவர் கூடப் பேசனும்... அவர் டோட்டர் குட்டி பேசறேன் என்று சொல்லுங்க... எந்த மீட்டிங்கா இருந்தாலும் வருவாரு!"

சற்றே நேர சங்கீதத்துக்கு அப்புறம் "என்ன குட்டி?"

"எனக்குப் பணம் வேணும்.."

"எவ்வளவு.."

"கொஞ்சம் அதிகமான தொகை.. ஒரு இலட்சம் ரூபாய்!"

"தர்றேன்... ஆனா, ஒரு கண்டிஷன்."

"நான் உங்களை வந்து பார்க்கனும். அவ்வளவுதானே...."

"ஆமாம்!"

"பார்க்கிறேன்... எல்லாரையும் ஒருமுறை பார்த்துட்டுப் போறேன்..."

"எங்க போறே..?"

"உங்கம்மா என்னவோ உளறினா. நீ ப்ரெக்னண்டா இருக்கிறதா... ஷி ஹேஸ் னொட் ஹேபர்!"

"ப்ரெக்னண்டா இருந்து பிள்ளை பெத்தாச்சு..."

"நீ இப்ப குழந்தையோடவா இருக்கிறாய்...?"

"இல்லை...குடுத்திட்டேன்."

"குட்டி நீ எனக்குக் கொடுக்கிறது ரொம்ப ஷாக்!"

"நீங்க என்னையும் அம்மாவையும் புறக்கணிச்சிட்டு ஓடியதை விடவா பெரிய ஷாக்? என் கண் முன்னாலேயே ரெண்டு பேரும் பேரும் என் குழந்தை மனசுக்கு எந்தவிதத்திலேயும் புரியாம உச்சக் குரல்ல நாலு வருஷம் சண்டை போட்டதைவிடவா? என்னை அத்தனை சின்ன வயசில கோர்ட்டுக்கு இழுத்ததைவிடவா பெரிய ஷாக் மிஸ்டர் ராமசாமி. இந்த ஷாக்... அந்த ஷாக்கினுடைய பேபி ஷாக்"

"ஓ. கே! உங்கம்மா மாதிரி நீயும் பேசறே... பாரு குட்டி... இப்ப கூட லேட் இல்லை. உன் சந்தோஷத்துக்காக, உங்கம்மாவை அந்தக் குஷ்காரனை விட்டு வரச்சொல்லு... நான் பகல் தர்றேன். அவளைத் திரும்ப ஏத்துக்கிறேன்... நீ சொல்லு.."

"எனக்கு அதில எந்த ஈடுபாடும் இல்லையப்பா...அது உங்க வாழ்க்கை. நான் என் வாழ்க்கையை என் தீர்மானத்தின்படி வாழ்கிறேன். மேலும் நீங்க சொல்லுறது ரொம்ப ரொம்ப லேட். பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னாடி செய்திருக்க வேண்டிய காரியம்."

"குட்டி, ஐ லவ் யூ! உன்னை நான் பார்த்தே ஆகனும்..."

"சரி"

"இப்பவே, இந்தக்கணமே பார்க்கனும்..."

அம்மாவுக்கு போன் செய்தாள்.

"என்னடி... என்ன பண்ணினே குழந்தையை...?"

"குடுத்திட்டேன் அம்மா..."

"நல்லவேளை யாருக்கு?"

"பெரிய வெள்ளைக்காரத் தம்பதிக்கு. அது இந்நேரம் சுவிட்சர்லாந்து பறந்துகொண்டிருக்கும். சந்தோஷமா வாங்கிண்டு போனா... உன்னைவிடச் சந்தோஷப்பட்டா..."

"நான்தான் சொன்னேனே, என் சங்கடத்தை."

"உன்கிட்டயிருந்து நான் எதுவும் எதிர்பார்க்கவில்லை. எனக்கு ஒரே ஒரு ஒத்தாசை செய்யனும்..."

**இன்பம் தொடரும்**

---

"எனை அம்மா உவர் எங்கட மானத்தை வாங்காமல் இருக்க மாட்டாராமோனை"

மோட்டார் வண்டியை விட்டதும் விடாததுமாய் எனது இளைய மகனின் வார்த்தைகள் என்னைக் குறிவைத்தன.

"ஏனடா நடு இராத்திரியில பேய் மாதிரி உலவிட்டு... எல்லாம் அலைஞ்சு போட்டு வந்து சிவனே என்றிருக்கிற அந்த மனிசனை வம்புக்கிழுக்கிறாய்.. எனடா பிரச்சினை?. என்ன நடந்தது?"

எனது மனைவியும் தன் பங்கிற்கு கேள்வியை அடுக்குகிறாள்.

"உன்ர மனிசனுக்கு வேறை வேலை என்ன? ... கனையா பணம் அனுப்புதுகள் செலவு செய்து கொண்டு சும்மா இருக்கிறதுக்கு, குளத்தடி ஆலமரத்துக்கு கீழ இருந்து புலம்பல். இவருக்கு சிநேகிதங்கள் வேறை ஆமாப் போட்டுக்கொண்டு. பக்கத்தால போனவங்கள் கேட்டிட்டு வந்து நக்கலடிக்கிறாங்கள்."

மதியம் சுத்தடியில் சிநேகிதர்களுடன் நான் பேசினதை எவனோ கேட்டுக்கொண்டு போய் பத்தவைச்சிட்டான். என்ர வேதனையைப்புரிய யாருமே இல்லை. இப்ப அமைதியாய் இருக்கிறது தான் எனக்கு நல்லது.

"எனடா அவர் புலம்பினா துக்கும் உனக்கும் என்ன சம்பந்தமடா? ஏனடா நீ புலம்புறாய் இப்ப?"

என்ர மனைவியும் அவனை விடுவதாய் இல்லை.

"ஓமனை ஓம்! உன்ர மனிசன் பெரிய உழைப்பாளி, விவசாயி அவருக்கு பட்டங்களை கொடுத்துக் கொண்டே போகலாம், அந்த விவசாயம் எத்தனை நாள் எங்களுக்கு வயித்திற்கு அரை வயிற்றுச்சாப்பாடு போட்டது. அரையாவ சும்மா இருக்கேலாதாம். ஓடியாடி வேலை செய்த உடம்பாம்.



# ஒரு விவசாயின் ஏக்கம்

**கயல்விழி**

கால்வயிறு கஞ்சி குடிச்சாலும் குனிஞ்சு நிமிர்ந்து உழைச்சுக்குடிக்கிறது போல வராதாம்.. பிள்ளையள் அனுப்பிறதில சாப்பிட கூசுதாம் கேளன் பின்ன. அவனவன் உழைச்சுத்தர ஆளில்லையே என்று அழுகிறான். இவருக்கு சும்மா இருந்து சாப்பிட முடியேல்லை:" அடுக்கிக்கொண்டே போகிறான் மகன். சின்னப்பிள்ளை என்று செல்லம் கொடுத்தது கூடாமப்போச்சு. காணாத திற்கு தமக்கை தமையன் என்று வெளிநாட்டில இருந்து காசனுப்ப கண்ட படி பேசவும் வெளிக்கிட்டிட்டான். தகப்பன் கின்னுக்கேறையாப் போயிட்டன்.

"அ பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில ஏறுது போல. சரி மோனை நீ வா சாப்பிட" அத்தோடு என்ர மனைவி அமைதியாகிவிட்டாள்.

நாளைபின்னடைக்கு தைப்பொங்கல். நான் ஒரு விவசாயி. என்ர நிலத்தில் ஏர் எடுத்து மாடு பூட்டி உழுது தான் எங்கள் குடும்பம் வாழ்ந்தது. அது தான் எங்கள் முக்கிய தொழில். எனக்கு ஐந்தாறு பிள்ளைகள் எனது உழைப்பு குடும்பச்செலவிற்கே சென்றுவிடும். வறுமை தான் யாருக்கில்லை? கஷ்டப்பட்டுத்தான் வளர்த்தனான், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் படிப்பை நிறுத்தவில்லை. கால் வயிறு கஞ்சி குடிச்சு, புத்தகங்கள் வாங்கிப்படிக்க வைச்சிருக்கிறன். அப்ப எல்லாம் தாழ்வாய்ப்படாத விவசாயம் இன்று என் பிள்ளைகளுக்கு மதிப்பற்ற ஒன்றாகிவிட்டது. இவை எல்லாம் ஒரு நேரம், என் னோட கூட நின்று பாத்திட்டுது ஆக்கள் இப்ப சேறு காணுதலை போல எட்டி நடக்கினம். எனக்கோ வயிறு பத்திஎரியுது.

எனது மூத்த மகனிற்கு வெளிநாட்டில் இருந்து வந்த சம்பந்தத்தால் அடுத்தடுத்த பிள்ளைகளும் வெளிநாடு செல்லும் அளவிற்கு எங்களுக்கு நிலைமை மாறிவிட்டது. மகிழ்ந்தேன். எங்கள் வாழ்க்கை முறை மாறியது. சாதாரண மண் குடிசையில் வாழ்ந்த நாங்கள் ஐஞ்சாறு அறையில் வீடு கட்டினோம் இன்னும் மகிழ்ச்சி தான். ஆனால் செல்வம் வந்தாப் பிறகு விவசாயம் ஏன், இனி அதை விட்டு விடச்சொல்லி என்ர பிள்ளைகள் சொன்ன போது நான் ஆடிப்போய்விட்டேன். அவர்களது அறியாமையை தீர்த்து வைக்க என்னால் முடியவில்லை. விவசாயம் செய்து சாப்பிடிற அளவில அவையில்லையாம்.

பிள்ளையள் வெளிநாட்டில; தகப்பன் வயலுக்க என்று ஊரும் பழிக்குமாம் சனத்தில். செல்வம் வந்த உடன் விவசாயம் அவர்களிற்கு கசந்தது எப்படி?

(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.02.2012 தொடக்கம் 08.02.2012 வரை)

## மேடம்

பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடி நிலை மாறி முன்னேற்றம் காணப்படும். பூர்வீகச் சொத்துக்களில் நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சினைகளுக்கு நல்லதொரு முடிவு கிடைக்கும். யாத்திரையின் போது மிகுந்த கவனத்துடன் பயணம் செய்து வருவது நல்லதாகும். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்த்தால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் வருகை மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். யாத்திரையின் போது மிகுந்த கவனத்துடன் பயணம் செய்து வருவது நல்லது. மறைமுகமான [illegible] அடைவீர்கள். நீண்ட காலமாகத் தடைபட்டு வந்த குல தெய்வ வழிபாடுகளைச் செய்து வருவீர்கள். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டிருந்த எண்ணங்கள் நிறைவேறும். திடீர் அதிர்ஷ்டம் [illegible] பணம் வந்து சேரும். விட்டுப் போன உறவுகள் [illegible]

## இடபம்

மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டாம். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் சற்று குறைந்து காணப்படும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். தாயின் உடல் நிலையில் சில பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவு-கள் ஏற்படலாம். புதிய வீடு, நிலம் மற்றும் வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் கேட்ட பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் பணம் மற்றும் பொருட்கள் விரயம் அடைவதன் இருக்கவும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதன் மூலமாக மனநிம்மதி அடைவீர்கள். விட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரலாம். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். குல தெய்வ ஆலயத் திருப்பணிகளுக்கான விசயங்களில் பணி ஆற்றுவதன் மூலம் நற்பெயர் புகழ் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கை வந்து சேரக் கூடிய காலமாகும். மனைவியின் சந்திப்புகளால் மன நிம்மதி அடைவீர்கள்.

அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதை நிறுத்தி இருக்க வேண்டும். வங்கிகளின் மூலம் எதிர்பார்த்து இருந்த உதவித் தொகையும் கிடைக்கும். நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த வீண் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும்.

## கடகம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த இடமாற்றம் கிடைக்க இன்னும் சற்று கால தாமதம் ஆகலாம். உடல்நிலையில் நரம்பு வலி போன்ற உபாதைகள் வந்து போகும். வீடு, நிலம் வாங்குவது சம்பந்தமான புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். பல வருடங்களுக்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்க கூடிய காலமாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். நெடு காலமாக எதிர்பார்த்துக் கொண்டு இருந்த அரசியல் வாதிகளால் ஆதாயம் உண்டாகும். உடல் நிலையில் கண் மற்றும் காதுகளில் சிறு உபாதைகள் வந்து போகும். மனைவியின் [illegible] மனநிம்மதியை அடைவீர்கள். [illegible] இருந்த பணம் மற்றும் பொருட்கள் வந்து சேரும்.

## சிங்கம்

புதிய நண்பர்களிடம் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். விட்டுப் போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். நீண்ட தூரப் பயணங்களின் மூலமாக எதிர்பார்த்த பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும். குலதெய்வ ஆலயத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். நீண்ட காலமாக திருமணம் ஆகாதவர்களுக்கு நண்பர்கள் உறவினர்களின் உதவியால் திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது. காதல் விவகாரத்தில் அனுகூலம் ஏற்படாது. உடம்பில் தலை மற்றும் முதுகுவலி போன்ற சில உபாதைகள் வந்து போகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

நீண்ட காலமாக தீர்க்கப்படாத அரச சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான முடிவுகள் வந்து சேரும். காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்லவைகள் கிடைக்க இன்னும் சற்று கால தாமதம் ஆகலாம். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கும். புதுமையான கட்டடங்களைப் [illegible] [illegible] செலவுகள் [illegible] வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த [illegible] பணம் திரும்பக் கைக்கு வந்து சேரும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் புதிய தொழில் முயற்சிகளில் [illegible] வேறு வகையாகக் கட்டப்படாத ஆலயத் திருப்பணிகளுக்காக [illegible] [illegible] பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன் வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பதால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த பணம் கை வந்து சேரும். குடும்ப சொத்துக்களில் நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் புகழ் மற்றும் பாராட்டுக்கள் கிடைக்கக் கூடும். சமுதாய முன்னேற்றத் திட்டப் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். தொழிலில் பணம் மற்றும் பொருட்கள் [illegible] இருக்கவும். வெளிநாட்டில் இருந்து எதிர்பாராத [illegible] [illegible] பெரியவர்களின் ஆதரவுடன் புதிய [illegible] ஏற்பட வாய்ப்பு உள்ளது. வெளிநாடு சென்று [illegible] [illegible] திட்டங்கள் நிறைவேறும்.

## விருச்சிகம்

பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன்களை வாங்குவீர்கள். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளுடன் வீண் மனக்கசப்புகள் [illegible] [illegible] [illegible] புதிய பொறுப்புகளில் [illegible] பணி ஆற்றுவீர்கள். அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு பழிப்பேச்சு இருக்க வேண்டாம். அடிக்கடி வீண் பொருள் விரயமும் மனஉளைச்சலும் உண்டாகும். பொருளாதார [illegible] தூரப் பயணங்களை மேற்கொண்டு வெற்றி பெறுவீர்கள். குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக [illegible] [illegible] [illegible] [illegible] செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் [illegible] [illegible] [illegible] பேசிப் பழகுதல் நல்லது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

தந்தை - மகன் உறவுகளில் சுமுகமான சூழ்நிலை உருவாகும். சகோதர சகோதரிகளின் நடைபெறாமல் இருந்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. [illegible] வேலை பணம் மற்றவர்களின் [illegible] திரும்பக் கிடைக்கும். பத்திரிகைத் துறையில் புதிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சிறிய ஆதாயம் அடைவீர்கள். அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு [illegible] திருப்பதாம் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லதாகும். குடும்பத்தில் இருந்து வந்த மருத்துவச் செலவுகள் [illegible] குறையும். [illegible] இருந்து எதிர்பாராத பொருள் வரவும், நல்ல செய்திகளும் வந்து சேரும். அநாதைச் சிறுவர்களுக்காக உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளில் ஏற்பட்டு வந்த தடைகள் நீங்கும். வெளிநாட்டு விசயங்களில் வெற்றி மகத்தரனால் ஆதாயங்கள் உண்டு. கணவன், மனைவி உறவுகளிலிருந்து வந்த மனக் குழப்பங்கள் மாறி மிகுந்த ஒற்றுமைகள் உண்டாகும். பத்திரிகையில் புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். வெளிநாடுகளில் இருந்து நற்செய்திகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். பிள்ளைகளால் சில தொல்லைகள் வந்து சேர இருப்பதால் கவனமுடன் இருந்தல் நல்லது. தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் புதிய தொடர்புகள் ஏற்பட்டு அதன் மூலம் நன்மை அடைவீர்கள். பழைய கடன்களை அடைப்பதற்காகப் புதிய கடன்கள் வாங்குவீர்கள். தாயின் உடல் நிலையில் சில பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். இது சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

வேதனையாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியினால் திரும்பக் கிடைக்கும். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அரசியல்வாதிகளால் ஆதாயம் ஏற்படாது. திருட்டுப் போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்து சேரும். உடல் நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான சிறு சிறு தொல்லைகள் வந்து போவதன் மூலம் மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் நல்லதொரு முடிவுகள் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம். குடும்பச் சொத்துக்களில் ஏற்பட்டு இருந்த வழக்குகளில் நல்ல முடிவுகள் கிடைக்கும். உடம்பில் அலர்ஜி மற்றும் சளி சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாக வீண் செலவுகள் வந்து சேரலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி மீண்டும் ஒன்று சேரக் கூடிய காலமாகும். புதிய வீடுகள், வாகனங்கள் மற்றும் தொழில் சாதனங்களை இடமாற்றம் செய்யப் போட்டிருந்த திட்டங்களில் சற்றுப் பின்னடைவு ஏற்படலாம். ஒரு சிலருக்கு கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் ஆதாயம் இல்லை. தந்தை - மகன் உறவுகளில் பிரச்சினைகள் குறைந்து முன்னேற்றம் காணப்படும். வெளிநாடுகளில் நீண்ட கால [illegible] [illegible] [illegible] சென்று உறவுகளைச் சந்தித்து திருப்திகரமான வாய்ப்புகள் உள்ள காலமாகும்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
-- காதில பூ கந்தசாமி --

வணக்கமுங்கோ! போனப்போகுதெண்டு கொஞ்ச நேரம் கடற்கரைப் பக்கம் போய் காத்து வாங்கிக் கொண்டு வருவமெண்டு சொல்லிப்போட்டு வெள்ளவத்தை கடற்கரைப் பக்கம் போனேனுங்கோ. மனமொரு குரங்குதானே, கள்ளிப்பக்கையளுக்கை நடக்கிற கள்ளத்தனங்களுக்க மேயச்சொல்லி கண்ணுக்கு மெசேஜ் குடுக்குதுங்கோ. என்னத்தைச் சொல்லுறது! உப்பிடி நான் போகேக்கை எங்கட போடியாரும் அந்த றூட்டை, குரோஸ் பண்ணிக் கொண்டு வாறார். பாத்தியளே கிழவனுக்கு என்ன குசும்பு எண்டு. பொறுங்கோ கிழவனை ஒரு பிடிபிடிப்பம்.

கா.பூ. என்ன போடியார் இந்தப் பக்கம் நோட்டம் விடுறீர்?

போடியார்: இல்லை அண்ணை! கொழும்புக்கு வந்தனான். சும்மா கொஞ்சம் காத்து வாங்குவமெண்டு சொல்லிட்டு இந்தப் பக்கம் வந்தன்.

கா.பூ. என்ன கொழும்புக்கு திடீர் பயணம்? சொல்லாமல் கொள்ளாமலுக்கு.

போடியார்: கலாம் ஐயா வந்தவர்தானே. அவரின்ர பிரசங் கேன்பிறன்ஸ் சாக்கில அந்த மகானையும் பாத்தநாய் இருக்குமெல்லோ. அதுதான் கிடைச்ச சான்ஸை விடாமல் வந்தனான்.

கா.பூ. ஓமோம்! அப்பிடிப்பட்ட கலாம் ஐயா மாதிரி கல்விமான்கள் எங்கட மண்ணில கால் பதிக்கிறதுக்கு நாங்கள் குடுத்து வைச்சிருக்க வேணும்.

போடியார்: சரியாச் சொன்னியள் அண்ணை. அவர் கல்விமான் மட்டுமில்லை, தூய்மையான மனிசன் என்கிறதையும் அவரைப் பாக்கேக்கைதான் விளங்கிச்சுது. கொஞ்சமும் பந்தா இல்லாமல் பொறுமையா. அன்பா எல்லாரோடையும் கதைக்கிறார். சத்தியமாச் சொல்லுறன். அண்ணை வாழ்ந்தால் அந்த மனிதனை மாதிரி வாழ வேணும்.

கா.பூ. போடியார்.... நீர் உப்பிடிச் சொல்லுறீர். ஆனா, எங்கட தரப்பில இருக்கிற அறிவு ஜீவிகள் எண்டு சொல்லிக் கொள்ளுகிற கொஞ்சப் பேரும் சாத்தான் வேதம் ஓதுமாப்போல இருக்கிற கொஞ்ச மீடியாக்காரரும் வேற மாதிரியெல்லோ சொல்லிக்கொண்டு திரியினம்.

போடியார்: ஓமோம்... கலாம் ஐயா! வாறாராம் எண்டு அறிஞ்சதுமே ஒப்பாரி வைக்கத் தொடங்கினவையள். அந்தாள் இஞ்ச வாறது மகா குற்றம் மாதிரியும், தமிழனுக்குச் செய்யிற துரோகம் போலவும் ஒப்பாரி வைச்சுக்கொண்டு திரியினம்.

கா.பூ.தம்பி இவையளின்ர கதையளைக் கேக்கேக்க கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை எண்டதுதான் ஞாபகம் வருகிறது.

போடியார்: சரியாச் சொன்னியள். யாரை எப்பிடி வரவேற்க வேணும், எதை எப்பிடி அணுக வேணும் என்டதொரு விவஸ்தையே இல்லாமல் அரச எதிர்ப்பு எண்ட வட்டத்துக்குள்ள நிண்டு கத்திக்கொண்டு இருக்கினம் கொஞ்சப் பேர். இவை இப்பிடி எடுத்ததுக்கெல்லாம் ஒப்பாரி வைக்கிறதால தங்கட இமேஜ் எல்லாம் டமேஜ் ஆகுது எண்டதைக்கூட விளங்கிக்கொள்கினம் இல்லை.

கா.பூ. தெரியாமல்தான் கேட்கிறன் போடியார்! இவை சொல்லுறதைக் கேட்டு நடக்கிறதுக்கு கலாம் ஐயா இவையின்ர வீட்டு வேலைக்காரனே?

போடியார்: அது ஒரு பக்கம் கிடக்க அண்ணை, இப்பிடி புத்திஜீவிகள் எண்டு சொல்லிக்கொண்டு இப்பிடியான பிற்போக்குத்தனமா தொடர்ந்து நடக்கிறதால, வெளியில இருந்து பாக்கிறவைக்கு எங்கட சமூகம் மேல இருக்கிற மதிப்பீடுகளும் குறைஞ்சுபோகுது. முன்னம் ஒரு காலத்தில எங்கட கருத்துக்களை ஏற்றுக் கொண்டவைகள் கூட இப்ப "சொல்லுக்கேக்காத குழப்படிக்காரங்கள் சும்மா கத்துறாங்கள்" எண்டு நினைக்கிற அளவுக்கு வந்திட்டுது.

கா.பூ. சரியாச் சொன்னாய் தம்பி! அரச எதிர்ப்பு அல்லது சிங்களவனுக்கு பாடம் படிப்பிக்கிறம் எண்டு வீரவசனம் பேசிக்கொண்டு வந்தவனிட்டை எல்லாம் தேவையில்லாத விசயங்களைப் பேசினதாலதான் எங்களுக்கு இந்த நிலைமை வந்தது. முன்னம் வந்த எரிக்சொல்ஹெய்ம் ஆகட்டும், யசூசி அகாசி ஆகட்டும் அல்லது அவையைப் போல எங்களைத் தேடி வந்த எத்தனையோ வெளிநாட்டுக்காரரை அணுகவேண்டிய முறையில அணுகி இருந்தால் எங்களுக்கு இந்த நிலைமை வந்திருக்குமே!

போடியார்: இப்பவும் நாங்க திருந்தியே விட்டம்! அப்ப செய்த பிழையைத்தான் இப்பவும் செய்து இருக்கிறம். கலாம் ஐயாவை உரிமையோடு வரவேற்று உரிய மாதிரி கதைச்சு அனுப்பாமலுக்கு இருக்கிறம்.

எங்களுக்கு விளங்கேல்ல சர்வதேச அளவில தமிழ் பேசுற கலாம் ஐயாவின்ர கருத்துக்களுக்கு இருக்கிற அங்கீகாரமும், மரியாதையும். அதையெல்லோ நாங்கள் எங்களுக்குச் சாதகமாய் பயன்படுத்தியிருக்க வேணும். யாரைச் சொல்லி நோகிறது எங்கட தலையெழுத்தை?!

யாவும் கலப்படமற்ற கற்பனை

# உலகிற்கு ஒளியூட்டியவர்



பல நாள் ஆராய்ச்சிக் கூடத்துக்கே போகாமல் புறக்கணிப்பார். 'அணையாத விளக்கைக் கண்டு பிடித்து விட்டேன்' என்று தம்பட்டமடித்துக் கொண்டு ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது. எடிசனின் முகத்தில் தோல்வியின் நிழல் படிபடலாயிற்று.

ஒரு நாள் தன் ஆராய்ச்சி சாலையில், டெலிபோனில் மேலும் சில முன்னேற்றங்களைக் காண ஆராய்ந்து கொண்டிருந்தார். அதற்குப் பயன்படும் விளக்குக் கரியை (லாம்ப் பிளாக்) ஏதோ சிந்தனையில் உருட்டித் திரித்துக் கொண்டிருந்த அவரது விரல்கள், மயிர் இழையாக அக்கரியைத் திரித்து நின்றது. ஆரம்ப நாட்களில் கரியை 'பிலமெண்டாக' பயன்படுத்தி இருக்கிறார் எடிசன். ஆனால், அது விரைவில் பிராண வாயுவோடு சேர்ந்து எரிந்து சாம்பலாகிப் போயிற்று.

இப்போது, காற்றில்லாத குமிழ்மான பல்பில் சோதனை நடத்துகிறார். அப்போது திறந்த வெளியில் தான் கரியை விளக்குக்குப் பயன்படுத்திப் பார்த்தார்.

இப்போது பிராணவாயு இல்லாத பல்பினுள், குமிழ்த்தில், கரியைப் பயன்படுத்திச் சோதித்தால் என்ன? துள்ளி எழுந்தார் எடிசன். புதிய யோசனையைச் செயற்படுத்த முனைந்தார். உலையின் உதவியினால் கரியை, கையால் திரித்த பருமனில் கம்பியாக்கிக் கொண்டார். அதை காற்றில்லாத (வாக்குவம்) பல்பினுள் பொருத்தி, அதில் மின்சாரத்தைச் செலுத்தினார். கார்பன் 'பிலமெண்' கனன்று எரிந்து ஒளி வீசியது. பிரகாசமாக இரவு முழுவதும், பகல் முழுவதும், மறுநாள் இரவிலும்!

உலகை வியக்க வைத்தவர்கள்


(வியப்புக்கள் தொடரும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## ஈர்ப்பு!





சிக்காக்கோவில் உள்ள மில்லினியம் பூங்காவில் அமைந்துள்ளது இந்த மேக நுழை-வாயில். இந்நுழைவாயிலை இந்தியாவில் பிறந்த பிரிட்டன் கலைஞர் அனிஷ் கபூர் வடிவமைத்துள்ளார். மேகத்தை பிரதிபலிக்கும் இந்நுழைவாயில், கண்ணாடியால் உருவாக்கப்பட்டுள்ளதால் இதில் சிக்காக்கோ நகரமே அழகாக காட்சியளிக்கிறது.மேலும் அனைவரின் கண்களைக் கவரும் வகை யில் அமைக்கப்பட்டுள்ள இந்த மேக நுழைவாயிலைப் படங்களில் காணலாம்.


## உணர்வு!



பொதுவாக நாம் பயணம் செய்வது சாலையில்தான். கட்டடங்களில் நுழையும் போது அல்லது நடமாடும் போது படிக்கட்டு வழியே நடப்பது வழக்கம். இல்லையே மின் தூக்கிகளைப் பயன்படுத்துவோம். ஆனால் இங்கு மனித உருவில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் நடமாடுபவர்களுக்குக் கிடைக்கின்ற அனுபவமோ வித்தியாசமானது. நெதர்லாந்து நாட்டில் அமைக்கப்பட்டுள்ள மனித உடம்பிலான கட்டடத்தில் உள்ள உறுப்புகளில் பயணம் செய்யும்போது, பயணம் செய்யும் ஒவ்வொரு உறுப்பும் அதன் பற்றிய விபரங்களை அளிக்குமாம். விசித்திரமான இந்தக் கட்டடத்தையும் அங்கு மனிதர்கள் நடமாடுவதையுமே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

## சாதனை வைரம்





57,500 கரட்டை கொண்டதும், 1.5 கிலோ கிராம் நிறையை உடையதுமான உலகின் மிகவும் பெறுமதி வாய்ந்த வைரமானது ஏலத்திற்கு வருகின்றது. இதன் ஆரம்ப பெறுமதி 1.15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. Teodora என பெயரிடப்பட்டுள்ள இந்த வைரம் பிரேசில் நாட்டில் கண்டெடுக்கப்பட்டு இந்தியாவில் வைத்து வெட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வைரத்தை ஏலத்தில் எடுக்கத் தவறும் பட்சத்தில் அமெரிக்காவிலுள்ள மாணிக்க ஆராய்ச்சி கல்வி நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதே வேளை குறித்த வைரமானது ஏலத்தில் விற்பனையாகும் பட்சத்தில் அதில் கிடைக்கின்ற வருமானத்தில் கணிசமான பகுதி பாதிக்கப்பட்ட சர்வதேச சிறார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இலகு பயணம்!





போக்குவரத்தை இலகுவாக்கவும், விரைவுபடுத்தவும் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை இன்றும் செலுத்தத் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். காரணம் துவிச்சக்கர வண்டியை சமநிலைப்படுத்தும் ஆற்றல் இல்லாமையாகும்.

ஆனால் இப்பொழுது அவர்களும் செலுத்தக்கூடிய வகையில் புதிய ஒற்றைச்சில்லு வண்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின்சாரத்தில் இயங்கும் வண்டியானது சுயமாகவே சமநிலை பெறும் ஆற்றலை கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது. இது version 2.0 ஆகும்.

1000 வோல்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டர் பொருத்தப்பட்டுள்ள இந்த வண்டிக்கு மின்சாரம் வழங்குவதற்கென விசேட லிதியம் அயரன் நனோ பொஸ்பேற் மின்கலம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இது மணிக்கு 16 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் ஆற்றலை கொண்டுள்ளதுடன் இம் மின்கலத்தை மீள்மின்னேற்றத்திற்கு உட்படுத்துவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் போதும். அதற்கான செலவு அமெரிக்க டொலர் பெறுமதியில் இரண்டு சதங்களாகும். மேலும் 13 கிலோ நிறையுடைய இவ்வண்டியின் பெறுமதி 1,499 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முயற்சி செய்; முடியும்!





Tao Porchon-Lynch என்ற இயற்பெயரை கொண்டுள்ள 93 வய-துடைய பாட்டி யோகா செய்து பார்ப்பவர்களை அசத்திவருவதுடன் இளம்வயதினருக்கு சவால்விடும் வகையில் பயிற்சிகளை மேற்கொள்கின்றார்.

ஐக்கிய அமெரிக்காவின் வெஸ்ட் செஸ்ரர் பகுதியை சேர்ந்த இவர் கடந்த 70 வருடங்களாக யோக செய்து வருகின்றார். அத்துடன் இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 45 வருடங்களாக தனது கலையை பயிற்சியும் கொடுத்துவருகின்றார்.

தினந்தோறும் காலையில் ஐந்து மணிக்கு தூக்கத்திலிருந்து விழிக்கும் இவர் நள்ளிரவிற்கு பின்னரே மீண்டும் தூங்கச்செல்கின்றார். மேலும் இந்த வயதிலும் சுறுசுறுப்பாக உள்ள பாட்டியை பார்க்கும் இளம் வயதி-னர் எல்லாம் மிகவும் ஆச்சரியப்படுத்துகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதல் பாலம்





ஜேர்மனியில் உள்ள Hohen-zollernbruecke பாலத்தை காதல் பாலமாக மாற்றியுள்ளனர். பொது இடத்தில் அமைந்துள்ள இப்பாலத்தில் காதலர்கள் தங்களது பெயர்களை ஒரு பூட்டில் எழுதி அதை பூட்டி இந்த பாலத்தில் தொங்கவிடுகின்றனர். மேலும் பொதுஇடங்களில் இவ்வாறு பூட்டை தொங்கவிடுவதனால் தங்களது காதல் வெற்றியடையும் என்பது காதலர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கை ஐரோப்பா நாடுகளில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கடைப்பிடிக்கப்பட்டது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org